
# திருமுறைத் தோத்திரப் பாடல்கள்



தொகுப்பு
மூ. சிவலிங்கம்

வெளியீடு
சைவத்திருநெறிக் கழகம்
இணுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைத்
# தோத்திரப் பாடல்கள்



தொகுப்பு

மூ.சிவலிங்கம்

வெளியீடு

சைவத்திருநெறிக் கழகம்

இணுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

கலியுகத்தில் இறைவனின் அருளை இலகுவாகப் பெறக்கூடிய வழி நாமவழிபாடு என்பதனை ஆதிசங்கரர் ஆணித்தரமாகக் கூறியுள்ளார். நாமவழிபாடு எனும்போது "ஓம் நமசிவாய", "ஓம் கணபதையே நம", "ஓம் சக்தி", "ஓம் சரவணபவாய நம", ஓம் நாராயணாய நம" என்ற மந்திரங்களை உள்ளன்போடு ஓசைநயத்தோடு உச்சரிக்க வேண்டும்.

இவற்றுக்கு மேலாக அனுபூதிமான்களால் அருளிச்செய்யப்பட்ட சைவப் பெருமக்களுக்கு கண்கள் போன்று விளங்கும் பன்னிரு திருமுறைப் பாடல்களை ஓதுதல் மிகச்சிறந்த நாமவழிபாடாகும்; அர்ச்சனைப் பாட்டேயாகும். ஆதலால் "மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக" என்று சிவபெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு கட்டளையிட்டு "பித்தா" என்று அடி எடுத்துக்கொடுத்த வரலாற்றை நாம் அறிவோம். இந்தவகையில் திருமுறைப் பாடல்கள் அர்ச்சனைக்குரிய மந்திரங்கள் என்பதில் ஐயுறவில்லை.

இதனால் நாம் எமது இல்லங்களிலும், பாடசாலைகளிலும், ஆலயங் களிலும் திருமுறை நூல்களை வைத்துப் பூசிப்பதுடன் நாளாந்தம் திருமுறைப் பாடல்களை ஒலிக்கச் செய்தல் வேண்டும். சைவத் தமிழ் வாழ்வின் முக்கிய வைபவமான புதுமனைப் புகுவிழாவின்போது ஆலயத்திலிருந்து புதுமனைக்கு எடுத்துச்செல்லும் மங்கலப் பொருட்களுள் ஒன்றாகத் திருமுறைநூல் இடம்பெறுதல் அவசியமாகும். புதுமனையில் பூசையின்போது பன்னிரு திருமுறைப்பாடல்கள் ஓதப்படவேண்டும். இதனால் மனையிலே மங்கலம் பெருகும்.

விரதகாலங்களில் திருமுறைகளை ஓதியபின் விரதத்துக்குரிய தெய்வம் மீது அருளாளர்களால் பாடப்பட்ட தோத்திரப் பாடல்களை (விநாயகர் அகவல், கந்தஷஷ்டி கவசம், அபிராமி அந்தாதி, சகலகலாவல்லிமாலை) ஓதுதல் சிறப்பானதாகும்.

இந்தவகையில் சைவமக்களுக்கு உதவக்கூடியதாக இச்சிறு தோத்திரமலரினை எமது கழகப் பொருளாளரும், கழகத்தின் அறநெறிப்பாடசாலைப் பொறுப்பாளருமான திரு.மூ.சிவலிங்கம் அவர்கள் தொகுத்துள்ளார்கள். அவர்களுக்கு எமது நன்றிகள் உரித்தாகட்டும். சைவப்பெருமக்கள் இந்நூல் மூலம் பயன்பல பெறுவார்களாக!.

**கெ.தவராசா**
தலைவர்,
இணுவில் சைவத்திருநெறிக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

"தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி"

இப்பரந்த பூவுலகின் கண்ணே தோன்றிய சமயங்களில் மிகச்சிறந்தது சைவசமயம். சைவத்தின் முழுமுதற்கடவுளாம் சிவபெருமான் எங்கும் நிறைந்தவர். தம்மை உள்ளன்போடு வழிபடும்மெய்யடியார்களின் துன்பங்களை நீக்கி உள்ளங்களில் உறைபவர். எம்மை உய்விக்கும் பொருட்டுப் பல தோற்றங்களுடன் பல திருவிளையாடல்களைச் செய்கிறார்.

எங்கே இறையன்பு நிறைவாகக் காணப்படுகின்றதோ அங்கே அறம் வளர்கிறது. எல்லா உயிர்களிடத்தும் அன்பு மலர்கிறது. எம்மை நாம் உள்ளும் புறமும் தூய்மை பெற இறைவனிடத்து பக்தி செலுத்தவேண்டும். இதனால் யாவரும் நன்மையடையலாம். இக்கலியுககாலத்தில் எம்மைப் பல துன்பங்கள் வருத்தலாம். இதற்கு இறைவழிபாடு மிக அவசியம். நாம் உள்ளன்புடன் இறைவனைத் துதித்துப் பாடிப் பரவசமடையலாம். இறைவனைப்பாடி பக்தி செலுத்துவதற்காக நெடுங்காலமாக அருளாளர்களும், நாயன்மார்களும், சமய நெறியாளர்களும் அவ்வப்போது தோன்றி தோத்திரங்கள், பாமாலைகள், திருவாசகம், திருப்புகழ், திருமறைகள் போன்ற பலவற்றைத் தூய தமிழில் பாடித்தந்துள்ளனர். இவற்றுள் பல சிதைந்துபோனாலும் இருப்பவை சிறப்பானவை. நாமும் அதன் பொருளுணர்ந்து இறைவனைப் பாடி எமது துன்பங்களை நீக்கி நன்மை பெறலாம். இவை யாவும் பன்னிரு திருமுறைகளாக அமைந்துள்ளன. இவற்றை வரிசைக்கிரமத்தில் பிழையின்றிப் படிக்கவேண்டும். கோயில்களிலும், வீடுகளிலும், வழிபடுமிடங்களிலும் பன்னிரு திருமுறைகள் பிழையில்லாமல் படிக்கவும், எமது சமயப் பாரம்பரியத்தைக் காக்கவும் எமது சமய நிறுவனங்கள் தம்மாலான பணிகளைச் செய்தல் வேண்டும்.

எமது இணுவில் சிவகாமி அறநெறிப்பாடசாலை மாணவர்கள் மட்டுமன்றி ஏனைய சைவச்சிறார்களும் திருமுறைகளைக் கிரமப்படி பிழையின்றப் படித்து நன்மைபெறவேண்டம். மேலும் வருடத்தில் ஒருமுறை நடைபெறும் பிள்ளையார் கதை, திருவெம்பாவை, நவராத்திரி, கந்தஷஷ்டி விழா காலங்களில் படிப்பதற்காக உரிய பாடல்களைப் படிக்க வேண்டும் என்பதற்காகவே இச்சிறுதொகுப்பு வெளிவருகிறது.

பன்னிரு திருமுறைகளில் தேவாரங்கள், திருவாசகம் ஆகியவை மிக ஆழமான கருத்துடையவை. இவற்றுடன் பிள்ளையார் கதை, அபிராமி அந்தாதி, சகலகலாவல்லிமாலை, கந்தசஷ்டி கவசம், திருப்புகழ் போன்றவை எமக்கு எந்த நிகழ்வுக்கும் பயன்படக்கூடிய வகையில் தொகுத்துள்ளோம். இத்தொகுப்பினை அன்னை சிவகாமியின் மலரடிகளில் சமர்ப்பிக்கின்றோம்.

**இணுவில் சிவகாமி அம்மன் கோவிலடி.** **மு.சிவலிங்கம்**

**15.04.2006** தொகுப்பாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் காப்பு

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெக்குச்
சங்கத்தமிழ் மூன்றுந்தா.

## சைவசமயகுரவர் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

## சைவசமயகுரவர் திருநட்சத்திரம்

சித்திரைச் சதயம் அப்பர், சிறந்தவை காசிமூலம்
அத்தரைப் பணிசம் பந்தர், ஆனிமா மகத்தில் அந்த
முத்தமிழ்வாத வூரர், முதியநல் ஆடி தன்னில்
சுத்தமாம் சோதி நாளில் சுந்தரர் கயிலை சேர்ந்தார்.

## சைவசமயகுரவர் வயது

அப்பருக் கெண்பத்தொன்(று) அருள்வாத வூரருக்குச்
செப்பியநா லெட்டினில் தெய்வீகம் - இப்புவியில்
சுந்தரர்க்கு மூவாறு தொன்ஞான சம்பந்தர்க்(கு)
அந்தம் பதினா றறி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பந்தர் பாடலின் அற்புதம்

புனலில் ஏடெதிர் செல்லெனச் செல்லுமே
புத்தனார்தலை தத்தெனத் தத்துமே
கனலில் ஏடிடப் பச்சென்று இருக்குமே
கதவு மாமறைக் காட்டில் அடைக்குமே
பனையில் ஆண்பனை பெண்பனை ஆக்குமே
பழைய என்புபொற் பாவைய தாக்குமே
சினவ ராவிடம் தீரெனத் தீருமே
செய்ய சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே.

## அப்பர் சுவாமிகள் பாடலின் அற்புதம்

தலைகொள் நஞ்சமு தாக விளையுமே
தழல்கொள் நீறு தடாகம தாகுமே
கொலைசெய் ஆனை குனிந்து பணியுமே
கோள ராவின் கொடுவிடந் தீருமே
கலைகொள் வேத வனப்பதி தன்னிலே
கதவுதானுங் கடுகத் திறக்குமே
அலைகொள் வாரியிற் கல்லும் மிதக்குமே
அப்பர் செப்பும் அருந்தமிழ்ப் பாடலே.

## சுந்தரர் பாடலின் அற்புதம்

வெங்க ராவுண்ட பிள்ளையை நல்குமே
வெள்ளை யானையின் மீதேறிச் செல்லுமே
மங்கை பாகனைத் தூது நடத்துமே
மருவி யாறு வழிவிட நிற்குமே
செங்கல் லானது தங்கம தாக்குமே
திகழும் ஆற்றிட்டுச் செம்பொன் எடுக்குமே
துங்க வான்பரி சேரற்கு நல்குமே
துய்ய நாவலூர்ச் சுந்தரர் பாடலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாதவூரர் பாடலின் அற்புதம்

பெருகும் வையை தனை அழைப் பிக்குமே
பிரம்படிக்குப் பிரான் மேனிகன்றுமே
நரியை வாம்பரி யாக நடத்துமே
நாடி மூகை தனைப்பே சுவிக்குமே
பரிவிற் பிட்டுக்குமண்சுமப் பிக்குமே
பரமன் ஏடெழு தக்கோ வைபாடுமே
வருகம் புத்தரை வாதினில் வெல்லுமே
வாத வூரர் வழங்கிய பாடலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

அருளிச்செய்த

# தேவாரம்

## முதலாந் திருமுறை

திருச்சிற்றம்பலம்

**திருப்பிரமபுரம்** பண் : நட்டபாடை

தோடுடையசெவி யன்விடை யேறியோர் தூவெண்மதிசூடி
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

**திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும்** வினாவுரை நட்டபாடை

அங்கமும்வேதமு மோதுநாவர் அந்தணர்நாளு மடிபரவ
மங்குன்மதிதவழ் மாடவீதிமருக னிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல விளங்கெரி யேந்தியாடுங் கணபதியீச்சரங் காமுறவே.

**திருவண்ணாமலை** நட்டபாடை

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரண் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே.

**திருப்பழனம்** தக்கேசி

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரிதோலார்
நாதாவெனவு நக்காவெனவு நம்பாவெனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநகராரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோயில்** **குறிஞ்சி**

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்டிங்கண் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே.

**திருவலிவலம்** **வியாழக்குறிஞ்சி**

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## இரண்டாந் திருமுறை

**திருமருகல்** **இந்தளம்**

சடையா யெனுமால் சரணீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ விவளுண் மெலிவே.

**திருப்புள்ளிருக்குவேளூர்** **சீகாமரம்**

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானா ருறையுமிடம்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே.

### திருநீற்றுப் பதிகம்

**திருவாலவாய்** **காந்தாரம்**

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே.

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே.

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே.

அருத்தம தாவது நீற அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.

எயிலது வட்டது நீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தாலவாயான் திருநீறே.

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி யால வாயான் திருநீறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்க டங்கண் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம் பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் திருநீறே.

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்து மால வாயான் திருநீறே.

ஆற்ற லடல்விடை யேறு மாலவாயான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

## கோளறு பதிகம்

பொது — பியந்தைக் காந்தாரம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொ டாமை யிவைமார் பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
ஒன்பதொ டொன்றொ டேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவளர் பவள மேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
திருமகள் கலைய தூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெதி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

மதிநுதல் மங்கை யோடு வடபா லிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
கொதியுறு கால னங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

நஞ்சணி கண்ட னெந்தை மடவாள்த னோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த வதனால்
வெஞ்சின அவுண ரோடும் உருமிடியு மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வாள்வரி யதள தாடை வரிகோ வணத்தர்
மடவாள்த னோடும் உடனாய்
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
கோளரி யுழுவை யோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பிள முலைநன் மங்கை யொருபாக மாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வேள்பட விழிசெய்தன்று விடைமேல் இருந்து
மடவாள்த னோடும் உடனாய்
வாள்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரயன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

பலபல வேட மாகும் பரன் நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோடெருக்கு முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

கொத்தலர் குழலி யோடு விசயற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியு நாகம் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
புத்தரொ டமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனமர் பொழில்கொ ளாலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமாபு ரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரை செய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

திருக்கேதீச்சரம் நட்டராகம்

விருது குன்றமா மேருவி னாணரா
வாவனலெரி யம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்
றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருதநின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை யடையாவே.

பாடல் வீணையர் பலபல சரிதைய
ரெருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவ ரமரர்கள் வேண்டநஞ்
சுண்டிருள் கண்டத்தர்
ஈட மாவது இருங்கடற் கரையினி
லெழிறிகழ் மாதோட்டம்
கேடி லாத கேதீச்சரந் தொழுதெழக்
கெடுமிடர் வினைதானே.

பெண்ணொர் பாகத்தர் பிறைதவழ் சடையின
ரறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ணமாதரித் தாடுவர் பாடுவ
ரகந்தொறு மிடுபிச்சைக்கு
உண்ணல் ஆவதோர் இச்சையின் உழல்பவர்
உயர்தரு மாதோட்டத்து
அண்ணல் நண்ணுகே தீச்சரம் அடைபவர்க்கு
அருவினை அடையாவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொடிகொள் மேனியர் புலியதள் அரையினர்
விரிதரு கரத்தேந்தும்
வடிகொள் மூவிலை வேலினர் நூலினர்
மறிகடல் மாதோட்டத்து
அடிகள் ஆதரித் திருந்தகே தீச்சரம்
பரிந்தசிந் தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல் லார்தம்மேல்
மொய்த்தெழும் வினைபோமே.

நல்லர் ஆற்றவும் ஞானநன் குடையர்தம்
மடைந்தவர்க் கருளீய
வல்லர் பார்மிசை வான்பிறப் பிறப்பிலர்
மலிகடல் மாதோட்டத்து
எல்லை யில்புகழ் எந்தைகே தீச்சரம்
இராப்பகல் நினைந்தேத்தி
அல்ல லாசறுத் தரனடி யிணைதொழும்
அன்பராம் அடியாரே.

பேழை வார்சடைப் பெருந்திரு மகடனைப்
பொருந்தவைத் தொருபாகம்
மாழை யங்கயற் கண்ணிபால் அருளிய
பொருளினர் குடிவாழ்க்கை
வாழை யம்பொழில் மந்திகள் களிப்புற
மருவிய மாதோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்தநீண் மார்பர்கே
தீச்சரம் பிரியாரே.

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல்
லுலகினில் உயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக்
காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழின்மஞ்ஞை
நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறுந் துதிசெய வருள்செய்கே
தீச்சர மதுதானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னி லங்கையர் குலபதி மலைநலிந்
தெடுத்தவன் முடிதிண்டோள்
தன்ன லங்கெட அடர்த்தவற் கருள் செய்த
தலைவனார் கடல்வாயப்
பொன்னி லங்கிய முத்துமா மணிகளும்
பொருந்திய மாதோட்டத்து
உன்னி அன்பொடும் அடியவர் இறைஞ்சுகே
தீச்சரத் துள்ளாரே.

பூவு ளானுமப் பொருகடல் வண்ணனும்
புவியிடந் தெழுந்தோடி
மேவி நாடிநின் னடியிணை காண்கிலா
வித்தக மென்னாகும்
மாவும் பூகமும் கதலியும் நெருங்குமா
தோட்டநன் நகர்மன்னித்
தேவி தன்னொடுந் திருந்துகே தீச்சரத்
திருந்தவெம் பெருமானே.

புத்த ராய்ச்சில புனைதுகி லுடையவர்
புறனுரைச் சமணாதர்
எத்த ராகி நின் றுண்பவர் இயம்பிய
ஏழைமை கேளேன்மின்
மத்த யானையை மறுகிட உரிசெய்து
போர்த்தவர் மாதோட்டத்து
அத்தர் மன்னுபா லாவியின் கரையிற்கே
தீச்சரம் அடைமின்னே.

மாடெ லாமண முரசெனக் கடலினது
ஒலிகவர் மாதோட்டத்து
ஆட லேறுடை யண்ணல்கே தீச்சரத்து
அடிகளை யணிகாழி
நாடு ளார்க்கிறை ஞானசம் பந்தன்சொல்
நவின்றெழு பாமாலைப்
பாட லாயின பாடுமின் பத்தர்கள்
பரகதி பெறலாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாந் திருமுறை

திருவாவடுதுறை காந்தாரபஞ்சமம்

இடரினுந் தளரினும் எனது றுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.

திருக்கழுமலம் கொல்லி

மண்ணின்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலை
கண்ணினல் ல.்.துறும் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

### நமச்சிவாயத் திருப்பதிகம்

பொது பண்: கௌசிகம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னாமம் நமச்சி வாயவே

### திருப்பாசுரம்

பொது கௌசிகம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாலவாய் புறநீர்மை

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணி செய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகன்நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவா யாவது மிதுவே.

திருக்கோணமலை புறநீர்மை

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலங் கொழிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே.

கடிதென வந்த கரிதனை யுரித்தே
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமு னித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலையமர்ந் தாரே.

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாக
மாகமுன் கலந்தவர் மதின்மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்தபே ருருவ விழித்தழ னாகந்
தாங்கிய மேருவெஞ்சிலையாக
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் னரற்றுஞ் செழுங்கடற் றரளஞ்
செம்பொனு மிப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் றிரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே.

தாயினு நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வரும் கூற்றைத்
திரிந்திடா வண்ண முதைத்தவற் கருளுஞ்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவன் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தவன் றருக்கை யிழித்தவர் விரலால்
ஏத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புகழாளர்
கோணமா மலையமர்ந் தாரே.

அருவரா தொருகை வெண்டலை யேந்தி
அகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையு நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரு மறியா வண்ணமொள் ளெரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்.
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே.

நின்றுணுஞ் சமணு மிருந்துணுந் தேரு
நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசின ரொருபான்
மெல்லிய லொடுமுட னாகித்
துன்றுமொண் பௌவ மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் துலவுங்
கோணமா மலையமர்ந் தாரே.

குற்றமி லாதர் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்தும்
உரைப்பவர் கேட்பவ ருயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநல்லூர் பெருமணம் அந்தாளிக்குறிஞ்சி

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணம் சூடல ரேதொண்டர்
நல்லூர்ப் பெருமண மேயநம் பானே.

## திருநாவுக்கரசு நாயனார்
## அருளிச்செய்த
# தேவாரம்
## நான்காந் திருமுறை

திருவதிகை வீரட்டானம் கொல்லி

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிரவும் பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக் கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலர்ந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவையாறு காந்தாரம்

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடியோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டேனவர்திருப் பாதங் கண்டறியாதன கண்டேன்.

## திருவங்கமாலை

பொது சாதாரி

தலையே நீ வணங்காய் - தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்

கண்காள் காண்மின்களோ - கடல்
நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசிநின் றாடும்பி ரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ

செவிகாள் கேண்மின்களோ - சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பி ரான்றிற மெப்போதும்
செவிகாள் கேண்மின்களோ.

மூக்கே நீ முரலாய் - முது
காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீமுரலாய்

வாயே வாழ்த்துகண்டாய் - மத
யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்பி ரான்றன்னை
வாயே வாழ்த்துகண்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சே நீ நினையாய் - நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கைம ணாளனை
நெஞ்சே நீ நினையாய்

கைகாள் கூப்பித்தொழீர் - கடி
மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக்
கைகாள் கூப்பித்தொழீர்

ஆக்கை யாற்பயனென் - அரன்
கோயில் வலம் வந்து
பூக்கையால் அட்டிப் போற்றி என்னாதஇவ்
வாக்கையாற் பயனென்.

கால்க ளாற்பயனென் - கறைக்
கண்ட னுறைகோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக்
கால்களாற் பயனென்.

உற்றா ராருளரோ - உயிர்
கொண்டு போம்பொழுது
குற்றா லத்துறை கூத்தனல் லானமக்கு
உற்றா ராருளரோ.

இறுமாந் திருப்பன்கொலொ - ஈசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்ச்சென்று
இறுமாந் திருப்பன்கொலோ.

தேடிக் கண்டுகொண்டேன் - திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுளே
தேடிக் கண்டுகொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமச்சிவாயத் திருப்பதிகம்

பொது　　　　　　　　காந்தார பஞ்சமம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே

காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீ ரமையவாட்டிப்
பூசனை யீசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே.

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே.

திருக்கச்சியேகம்பம்　　　　　　　　திருவிருத்தம்

கருவுற்ற நாள்முத லாகவுன் பாதமே காண்பதற்கு
உருகிற்றெ னுள்ளமும் நானும் கிடந்தலந் தெய்த் தொழிந்தேன்
திருவொற்றியூரா திருவாலவாயா திருவாரூரா
ஒருபற்றி லாமையுங் கண்டிரங் காய்கச்சி யேகம்பனே.

# ஐந்தாம் திருமுறை

கோயில்　　　　　　　　திருக்குறுந்தொகை

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்ப வர்மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கடம்பூர் திருக்குறுந்தொகை

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையும் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே

பொது தனிக்குறுந்தொகை

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

பொது ஆதிபுராணத் திருக்குறுந்தொகை

வேத நாயகன் வேதியர் நாயகன்
மாதின் நாயகன் மாதவர் நாயகன்
ஆதி நாயகன் ஆதிரை நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே

## ஆறாம் திருமுறை

திருவாரூர் திருத்தாண்டவம்

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீயென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

## சுந்தரமூர்த்தி நாயனார்
அருளிச்செய்த

# தேவாரம்

## ஏழாந் திருமுறை

**திருவெண்ணெய்நல்லூர்** — **இந்தளம்**

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அத்தாவுனக் காளாய்இனி அல்லேனென லாமே.

**திருமழபாடி** — **நட்டராகம்**

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக் கேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தொண்டத்தொகை

திருவாரூர் கொல்லிக்கௌவாணம்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்.
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

அந்த ணாளனுன் னடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வவ்வி னாய்க்குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன்தமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்குஞ்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே.

திருக்கேதீச்சரம் நட்டபாடை

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.

சுடுவார்பொடி நீறுந்நல துண்டப்பிறை கீளும்
கடமார்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாஉறை கின்றான்திருக் கேதீச்சரத் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கம்மொழி யன்னாரவர் அமரர் தொழுதேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்ட நன்னகரில்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான்திருக் கேதீச்சரத் தானே.

கரியகறைக் கண்டன்நல கண்மேல்ஒரு கண்ணான்
வரியசிறை வண்டியாழ்செயும் மாதோட்டநன் னகருள்
பரியதிரை யெறியாவரு பாலாவியின் கரைமேல்
தெரியும் மறை வல்லான்திருக் கேதீச்சரத் தானே.

அங்கத்துறு நோய்கள்அடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்ட நன்னகரில்
பங்கம்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம் பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே.

வெய்யவினை யாயவடி யார்மேலொழித் தருளி
வையம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்திருக் கேதீச்சரத் தானே.

ஊனத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடல் மாதோட்ட நன்னகரில்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்திருக் கேதீச்சரத் தானே.

அட்டன்னழ காகவ்வரை தன்மேலர வார்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழில் மாதோட்ட நன் னகரில்
பட்டவ்வரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்நமை யாள்வான்திருக் கேதீச்சரத் தானே.

மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்களி தூங்கும்பொழில் மாதோட்ட நன்னகரில்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்எனை ஆள்வான்திருக் கேதீச்சரத் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருள்
சிறையார் பொழில் வண்டியாழ்செயுங் கேதீச்சரத் தானை
மறையார்புகழ் ஊரன்னடித் தொண்டன்னுரை செய்த
குறையாத் தமிழ் பத்துஞ்சொலக் கூடாகொடு வினையே.

**திருக்கூடலையாற்றூர்** **புறநீர்மை**

வடியுடை மழுவேந்தி மதகரியுரி போர்த்துப்
பொடியணி திருமேனிப் புரிகுழ லுமையோடும்
கொடியணிநெடுமாடக் கூடலை யாற்றூரில்
அடிகள்இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே.

**திருவாரூர்** **செந்துருத்தி**

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளேகனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்த்து போதீரே.

**மாணிக்கவாசக சுவாமிகள்**

**அருளிச்செய்த**

# திருவாசகம்

## எட்டாந் திருமுறை

திருச்சிற்றம்பலம்

### சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க! நாதன்றாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏக னனேகன் இறைவன் அடிவாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரம்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க!

ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பனியான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டுஇன்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னைப் அகல்விக்கும் நல்லறிவே

ஆக்க மளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருச்சதகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே.

### நீத்தல் விண்ணப்பம்

கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டு கொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல் வேங்கையின்தோல்
உடையவனே மன்னும் உத்தரச கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம்பி ரானென்னைத் தாங்கிக் கொள்ளே.

## திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்கன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்.

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போ திப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்.

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான்ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையேயெமக் கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையுமிலோ மேலோர் எம்பாவாய்.

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓதஉலவா ஒரு தோழன் தொண்ட ருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடி யோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யாவெண் ணீறாடீ செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும்வகை யெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமை யேலோர் எம்பாவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும்பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய்.

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதிதிறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடி மேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலப்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளும் சேவகனை
அங்கண்அரசை அடியோங்கட்காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய்நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்குஅப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங்காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறெமக் கேலோர் எம்பாவாய்.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்.

## திருப்பொற்சுண்ணம்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன் ஐயாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே.

காசணி மின்கள் உலக்கை யெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

அறுகெடுப் பார்அய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே.

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான் என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
பொய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பபொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே.

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடு ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப் பொற் சுண்ணம் இடித்துநாமே.

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப்பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கோடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடி
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடி
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடி கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே.

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இரு ளாயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்கு
பந்தமு மாய்வீடும் ஆயினார்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

### திருச்சாழல்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடி
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ.

## திருப்பள்ளியெழுச்சி

போற்றிஎன் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எமை யுடையாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தரு ளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணன் இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல் அங்கண்ணாம்
திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே.

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே.

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலிகூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே.

பூதங்கள் தோறும்நின்றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறியோம்உனைக் கண்ட றிவாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாய்எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே.

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே.

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயுநின் னடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும்கட்டி
அந்தண னாவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே.

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேஉன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நொக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமுதே பள்ளி எழுந்தரு ளாயே.

## கோயில் மூத்த திருப்பதிகம்

உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள்
நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப
தானால் அடியேனுன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
புரியாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும்
வண்ணம் முன்னின்றே.

## கோயில் திருப்பதிகம்

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பம் என்னுடை அன்பே.

## அச்சோப்பதிகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தனெனக்
கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாந் திருமுறை

### கருவூர்த்தேவர் அருளிச் செய்த

# திருவிசைப்பா

திருச்சிற்றம்பலம்

**கங்கைகொண்ட சோளேச்சரம்** **பஞ்சமம்**

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும் நான் மறக்கேன்
முன்னம் மாலறியா ஒருவனாம் இருவா
முக்கணா நாற்பெருந்தடந்தோள்
கன்னலே தேனே அமுதமே கங்கை
கொண்ட சோளேச் சரத்தானே

### சேந்தனார் அருளிச் செய்தது

# திருப்பல்லாண்டு

மன்னுகதில்லை வளர்க நம்
பக்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின் செய்மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோமுக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி அறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாதையைத் தாறை வீசிய
        சண்டிக்கிவ் அண்டத்தொடுமுடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற்
        கோயிலும் போனகமும் அருளிச்
சோதிமணிமுடித் தாமமும்
        நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசுவைத்தானுக்கே
        பல்லாண்டு கூறுதுமே

எந்தை எந்தாய் சுற்றமுற்றும்
        எமக்கமுதாய் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யும் சிவன்சீர்
        அடியார் அடிநாய் செப்புறை
அந்தமில் ஆனந்தச் சேந்தன்
        எனைப் புகுந்தாண்டு கொண்டாருயிர்மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே
        என்றுபல்லாண்டு கூறுதுமே

## திருமூலநாயனார்
### அருளிச்செய்த
# திருமந்திரம்
## பத்தாந் திருமுறை

திருச்சிற்றம்பலம்

ஒன்றவன்தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந்தான் ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந்தானுணர்ந்தெட்டே

பின்னை நின்றென்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யார்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்கு மாம்உ ண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவாமாய் அம்ர்ந்திருந்தாரே.

## பதினொராந் திருமுறை

### திருவாலவாயுடையார் அருளிச் செய்த

# திருமுகப்பாசுரம்

மதிமலிபுரிசை மாடக்கூடல்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிறகு
அன்னம் பயில் பொழில் ஆலவாயில்
மன்னிய சிவன்யான் மொழிதருமாற்றம்
பருவக்கொண் மூப்படியெனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமாமதியுரை குலவிய குடைக்கீழ்
செருமா உகைக்கும் சேரலன் காண்க
பண்பால் யாழ் பயில் பாணபத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைக்காலம்மையார் அருளிச் செய்த
# அற்புதத் திருவந்தாதி

எனக்கினிய எம்மானை ஈசனையான்என்றும்
மனக்கினிய வைப்பாக வைத்தேன் - எனக்கவனைக்
கொண்டேன் பிரானாகக் கொள்வதுமே இன்புற்றேன்
உண்டே எனக்கரிய தொன்று

## கபில தேவநாயனார் அருளியது

விநாயகனே வெவ்வினையை வேரறுக்கவல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

## நக்கீரன் அருளிய
# திருமுருகாற்றுப்படை

உன்னையொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தி வாழ்வே.

அஞ்சுமுகம் தோன்றில் ஆறு முகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சல்என வேல்தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா என்றோதுவார் முன்.

# பன்னிரண்டாந் திருமுறை

## சேக்கிழார் சுவாமிகள் அருளிச்செய்த
# பெரியபுராணம்

திருச்சிற்றம்பலம்

உலகெலா முணர்ந்தோதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடைமருங்கில் இளம்பிறையும் தனிவிழிக்கும் திருநுதலும்
இடம் மருங்கில் உமையவளும் எம்மருங்கும் பூதகணம்
புடைநெருங்கும் பெருமையும் முன் கண்டரசன் போற்றிசைப்ப
விடைமருவும் பெருமானும் விறல்வேந்தற்கருள் கொடுத்தான்

சொல்லுவதறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி
வல்லைவந்தருளி என்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையில் இன்பவெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம்பலத்துளாடும் சேவடி போற்றி என்ன

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகலாம்.

திருச்சிற்றம்பலம்

**பன்னிருதிருமுறை முற்றுப்பெற்றது.**

## அருணகிரிநாத சுவாமிகள் அருளிச்செய்த

# திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொடவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவர்
கற்பகம் எனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிற்றனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புனம் அதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறுமுருகனை
அக்கண மணமருள் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகனுக்குச் சிறந்த ஆடிக்கார்த்திகை அன்று கீழ்வரும் இரண்டு திருப்புகழ்களையும் ஆறுமுறை ஓதினால் மனநிம்மதியும் சகல செல்வங்களும் கிடைக்கும்.

அதிருங் கழல் பணிந்து னடியேனுன்
அபயம் புகுவ தென்று நிலைகாண
இதயந்தனிலிருந்து க்ருபை யாகி
இடர்சங்கைகள் கலங்க அருள்வாயே
எதிரங்கொருவரின்றி நடமாடும்
இறைவன் தனது பங்கில் உமைபாலா
பதியெங்கிலுமிருந்து விளையாடிப்
பலகுன்றிலும் மர்ந்த பெருமாளே
சரணகமலாலயத்தை அரைநிமிட நேரமட்டில்
தவமுறைதியானம் வைக்க அறியாத
சடகசட மூடமட்டி பவவினையிலே சனித்த
தமியன்மிடி யால்மய்க்க முறுவேனோ

கருணைபுரி யாதிருப்ப தெனகுறையில் வேளை செப்பு
கயிலை மலை நாதர் பெற்ற குமரோனே
கடகபுயமீது ரத்ன மணியணியொன்மாலை செச்சை
கமழுமண மார்கடப்ப மணிவோனே
தருணமிதையா மிகுத்த கணமதுறு நீள் சவுக்ய
சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவஞான முத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரியவேணு நெய்த்த - வடிவேலா
அருணதள பாதபத்ம மது நிதமுமே துதிக்க
அரிய தமிழ் தானளித்த மயில்வீரா
அதிசயம் அநேகமுற்ற பழனிமலை மீதுதித்த
அழகர் திருவேரகத்தின் முருகோனே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவத்திருமுறைகளின் (தமிழ் வேதங்களின்) அருமையும் பெருமையும்

(1) முதல் திருமுறை (முதல் தமிழ்வேதம் "தோடு" என்னும் மங்கலச் சொல்லுடன் துவங்குகிறது.) "தோடு" என்னும் சொல்லின் முதலில் உள்ள "த்" எனும் மெய்யெழுத்தை நீக்கினால் எஞ்சி நிற்பது "ஓ" என்பதாகும். நமது திருமுறைகள் (தமிழ் வேதங்கள்) "ஓ" எனும் எழுத்தில் துவங்குவதாகக் கொள்ள வேண்டும்.

பன்னிரண்டாவது திருமுறையாகிய பெரியபுராணத்தின் பூர்த்திப் பாசுரம் "ம்" எனும் எழுத்தில் முடிகிறது. எனவே நமது திருமுறைகள் (தமிழ்வேதங்கள்) பன்னிரெண்டும் ஓம் எனும் பிரணவ மந்திரத்தின் விரிவே ஆகும்.

(2) கயிலாயத்தில் அரங்கேற்றப்பட்டு மண்ணுலகிற்கு வந்தது சேரமான் பெருமான் அருளிய "திருக்கைலாய ஞான உலா". இது பதினோராம் திருமுறையில் உள்ளது.

(3) மாலும் பிரமனும் காணா மாட்சிமையுடைய சேவடிகள் தரைமேல் தோய இறைவனைத் தூதுபோக வைத்தது நமது திருமுறைகள் (சுந்தரர் பொருட்டு).

(4) காரைக்காலம்மையார் அருளிய மூத்த திருப்பதிகங்கள் அம்மையார் வேண்டுதலின்படி அவர்களை என்புருவாக்கியது. திருஞானசம்பந்தர் அருளிய (திருக்கடைக்காப்பு) பாசுரங்கள் மயிலாப்பூரில் குடத்தில் இருந்த எலும்புகளைப் பெண் ஆக்கியது. (பூம்பாவை வரலாறு)

(5) நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தப் பெருமானுக்கு கோலக்காவில் பொற்றாளம் பெற்றுத் தந்தது.

சமீபத்தில் நடந்த ஓர் அரிய நிகழ்ச்சியை நாம் அனைவரும் தெரிந்து கொள்வது நலம் பயப்பதாகும். தென்னாட்டைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்த ஓர் செல்வந்தரின் மகன் பன்னிரண்டு வயதாகியும் பேசவில்லை. எல்லா வகையான மருத்துவமும் செய்து முடித்தும் பேச்சு வரவில்லை. முடிவில் கோலக்காவில் உறையும் பெருமானிடம் ஐயனே! கோலக்கா மேவிய குரு மணியே! எங்கள் பிள்ளைக்குப் பேச்சு வருமானால் பொன்னால் தாளம் செய்து வைக்கிறோம் எனப் பிரார்த்தித்துக் கொண்டார்கள்.

இறைவன் சம்பந்தருக்குப் பொன்னால் ஆன தாளம் வழங்கினார். பொற்றாளத்தில் ஓசை வரும்படி அம்மையார் அருள்பாலித்தார். இதனால் இத்தலத்து அம்பாள் ஓசைநாயகி எனப்படுகிறார்.

பொற்றாளத்திற்கு ஓசை கொடுத்த பரம்பொருள் அந்தச் சிறுவனுக்கும் பேசும் ஆற்றலை அருளியது. சிறுவன் நன்கு பேசும் ஆற்றலைப் பெற்றான். பெற்றோர்களும் ஒன்பது சவரன் எடையுடைய பொற்றாளம் செய்து ஆலயத்திற்கு காணிக்கையாக அளித்துள்ளார்கள். கோலக்கா அர்ச்சகர் இன்றும் அங்கு செல்லும் அனைவரிடமும் அந்தப் பொற்றாளத்தைக் காண் பித்தும் வரலாற்றினைக் கூறியும் மகிழ்கிறார்.

(6) திருநனிபள்ளியில் பாலை நிலத்தை வளம் பொருத்திய நெய்தல் நிலமாக மாற்றியது தமிழ் வேதம்.

(7) முத்துச்சிவிகை, முத்துக்குடை, ஆகியவற்றைப் பெற்றுத் தந்தது. (நெய்வாயில் அரத்துறையில்)

(8) முயலகன் என்னும் வாதநோய், படை, சொரி, பனிநோய், தீராத சூலைநோய், ஜுரம் முதலிய நோய்களைக் குணப் படுத்தும் வல்லமை உடையவை நமது திருமுறைகள்.

(9) எடுக்க எடுக்க குறையாத உலவாக்கிழியைப் பெற்றுத்தந்தது. தினமும் பொற்காசு பெற்றுத் தந்தது. (திருவாவடுதுறை, திருவீழிமிழலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(10) செங்கல்லைத் தங்கமாக்கியது. (சுந்தரர் பொருட்டு திருப்புகலூரில்)

(11) பாம்பு தீண்டிய வணிகனையும் (திருமருகல்) அப்பூதியடிகளாரின் மூத்தமகனையும் (உயிர்பெற்றெழச் செய்தது. (இறந்தாரை எழுப்பும் திறம் வாய்ந்தது)

(12) வடமொழி வேதங்கள் பூட்டிய ஆலயக்கதவினை (திருமறைக் காடு) திறக்கச் செய்தது.

(13) தண்ணீரில் எதிர்த்து வரும் தகைமை பெற்றது.

(14) கூன்பாண்டியனுடைய தீராத வெப்புநோயினைத் தீர்த்தது. அவனது உடம்பிலிருந்து ஊனத்தையும் நீக்கியது.

(15) ஆற்று வெள்ளத்தில் ஓடத்தை ஓட்டும் ஓடக்காரன் இல்லாமலேயே ஓடத்தைச் செலுத்தியது. (கொள்ளம் பூதூர்)

(16) சிவனருட் செல்வர்களைப் பரிகசித்தவர்கள் தலையில் இடி விழச்செய்தது. (போதிமங்கையில் புத்த நந்தியின் தலையில் இடிவிழச் செய்தது)

(17) ஆண் பனைமரம் பெண் பனைமரமாக்கியது நமது திருமுறை (தமிழ்வேத) ஒலியலைகளால் மரத்தன் ஊனமே நீங்கியது எனில் நம்முடைய பிறவிப்பிணி தீயிலிட்ட பஞ்சுபோல் அழிந்தொழியும் என்பது சொல்லாமலே விளங்கும்.

(18) அதிவெப்பமுடைய நீற்றறையை தென்றலாகக் குளிரச்செய்தது.

(19) விடத்தினை அமுதமாக்கியது. (அப்பர்)

(20) சினமிகுந்த மதயானையை பணிய வைத்தது. (அப்பர்)

(21) கல்லையும் கடலில் மிதக்கச்செய்து கரையேற்றியது நமது திருமுறைகள் எனில் நம்மை இப்பிறவிக் கடலில் இருந்து முத்தி எனும் கரைசேர்ப்பது மிக எளிது என்று நாம் உணரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(22) பொதி சோறு பெற்றுத் தந்தது.

(23) நெருப்பில் வேகாமல் இருக்கும் வல்லமை உடையது.

(24) "பித்தா" என்னும், "உலகெலாம்" என்றும், "தில்லைவாழ் அந்தணர்" என்றும் இறைவனால் அடியெடுத்துக் கொடுக்கப் பட்டு பாடப்பட்டவை நமது திருமுறைகள்.

(25) மூவர்கள், தேவர்கள், மற்றும் யாபேரும் சிவபெருமானைத் தேடிச் செல்கிறார்கள். ஆனால் தமிழோடு இசை கேட்கும் இச்சையால் இறைவன் அடியார்களைத் தேடிவந்தார்.

(26) நமது திருமுறைகள் சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு வேண்டும் பொழுதெல்லாம் பொற்காசுகளைப் பெற்றுத் தந்தன.

(27) திருமுது குன்றத்தில் உள்ள மணிமுத்தாற்றில் போட்ட பொற்காசுகளைத் திருவாரூர் குளத்தில் கிடைக்கச்செய்தது.

(28) இறைவன் வீடுதோறும் இரந்து உணவு கொண்டு வரும்படி செய்தது. (திருகச்சூரில்)

(29) ஒளியிழந்த கண்களை ஒளிபெறச் செய்தன. (சுந்தரர்)

(30) திருட்டுபோன பொருட்களை மீண்டும் பெற்றுத் தந்தன. (திருமுருகன் பூண்டி)

(31) காவிரி ஆற்றின் வெள்ளம் விலகி வழிவிடச் செய்தது.

(32) மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மூவேந்தர்களையும் பணியச் செய்தன.

(33) முதலையுண்ட பாலனை சில ஆண்டுகள் கழித்து வெளியே உயிருடன் எழச் செய்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(34) ஊமைப் பெண்ணை பேசும்படி செய்தது.

(35) தில்லையில் ஓடாத தேரினை ஓடும்படி செய்தன. (சேந்தனாரின் திருப்பல்லாண்டு)

(36) இறைவனே தன் திருக்கரங்களால் எழுதும் பெருமையைப் பெற்றவை நமது திருமுறைகள்.

பிறமொழிகளில் உள்ள நூல்கள், மந்திரங்கள் யாவும் இறைவனை அடையும் வழிகளைச் சொல்லும். ஆனால் நமது தமிழ் திருமுறைகள் இறைவனை நம்பால் வரவழைக்கும்.

'தேவாரம்' (தே + வாரம்) இறைவன் மீது அன்பு உண்டாகச் செய்வது என்பது பொருள். அன்பு தோன்றுமிடம் மனம் மனதை மலருக்கு ஒப்பிடுவது ஆன்றோர் வழக்கு. பட்டினத்துப் பிள்ளையாரும் பதினோராம் திருமுறையில் என் சிந்தைத் தாமரை என்று கூறியிருப்பதை அறியலாம்.

அடியார்களின் மனமாகிய மலரில் அன்பு எனும் தேனை உண்டாகச் செய்வது நமது திருமுறைகளே ஆகும். இந்த அன்பு எனும் தேனைப் பருகுவதற்கு இறைவனாகிய வண்டு மலர்களைத் தேடி (அடியாரின் மனங்களைத் தேடி) வருவதுதான் உலக நியதி.

இறைவன் அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை. அன்பெனும் கடத்துள் அடங்கிவிடும் கடல். அன்பெனும் வலைக்குட்படும் பரம்பொருள் ஆவர். இப்படி இறைவனை அடியார்களிடம் வரும்படி செய்பவை நமது தமிழ் வேதங்கள் (திருமுறைகள்) இதனையே திருவள்ளுவரும் மலர்மிசையேகினான் என்று அருளியுள்ளதால் அறியலாம்.

**"அணி நாவல் ஆரூரன் சொன்ன அருந்தமிழ்கள்**
**இவை வல்லார் அமருலகு ஆள்பவரே"**

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



வரதபண்டிதர் இயற்றிய

# பிள்ளையார் கதை

## காப்பு

கரும்பும் இளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பு மவல்பலவும் மேன்மேல் - அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்குக் காப்பு.

திருவிளங்கு மான்மருகா சேவதனி லேறி
வருமரன்றா னீன்றருளு மைந்தா - முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத்தொழுவேன்
என்கதைக்கு நீயென்றுங் காப்பு.

## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமு கத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

ஒற்றை மருப்பும் ஓரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் - பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனதிலெப்பொழுதுங்
கொண்டக்கால் வாராது கூற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங்கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

## சப்பாணி

எள்ளு பொரிதே னவலப்ப மிக்கும் பயறு மிளநீரும்
வள்ளிக் கிழங்கும் மாம்பழமும் வாழைப்பழமும் பலாப்பழமும்,
வெள்ளைப்பாலும் மோதகமும் விரும்பிப்படைத்தேன் சந்நிதியில்
கொள்ளைக் கருணைக் கணபதியே கொட்டி யருள்க சப்பாணி.

சண்டப் பெருச்சா ளியேறிச் சடைகொண்டு வையத்துலாவி
அண்டத் தமரர் துதிக்க வடியார்க் கருளும் பிரானே
எண்டிக்கு மன்பர்கள் பார்க்க இணையற்ற பேரொளி வீசக்,
குண்டைக் கணபதி நம்பி கொடுங்கையாற் சப்பாணி கொட்டே.

## சரஸ்வதி துணை

புத்தகத் துள்ளுறை மாதே
பூவி லமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளாய் நங்காய்
வேதப் பொருளுக் கிறைவீ
முத்தின் குடையுடை யாளே
மூவுல குந்தொழு தேத்துஞ்
செப்புக் கவித்த முலையாய்
செவ்வரி யோடிய கண்ணாய்
தக்கோலந் தின்னும் வாயாய்
சரஸ்வதி யெனுந் திருவே
எக்கால முமுனைத் தொழுவே
னியலிசை நாடகமென்னும்
முத்தமிழ்க் கல்விக ளெல்லாம்
முழுது மெனக்கருள் செய்துஎன்
சித்தந் தனில்நீ யிருந்து
திருவருள் செய்திடுவாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரம்

பொன்னிறங் கடுக்கும் புனற்செறி குடுமித்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவன்
கந்தமும்மதக் கரிமுகன் கதைதனைச்
செந்தமிழ் வகையாற் றெளிவுறச் செப்பினன்
அன்னதிற் பிறவில் அரில்தபத் திரட்டித்
தொன்னெறி விளங்கச் சொல்லுவன் கதையே.

## கதை

மந்திர கிரியில் வடபா லாங்கோர்
இந்து தவழ் சோலை யிராசமா நகரியில்
அந்தண னொருவனு மாயிழை யொருத்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுளா லயமுங் கடிமலர்ப் பொய்கையுந்
தடநிழற் பள்ளியுந் தாம்பல சமைத்துப்
புதல்வரைத் தருகெனப் பொருப்பர சீன்ற
மதர்விழி பாகனை வழிபடு நாளில்
மற்றவர் புரியும் மாதவங் கண்டு
சிற்றிடை யுமையாள் சிவனடி வணங்கிப்
பரனே சிவனே பல்லுயிர்க் குயிரே
அரனே மறையவர்க் கருள்புரிந் தருளென
அந்தவந் தணனுக் கிந்தநற் பிறப்பில்
மைந்தரில் லையென்று மறுத்தர னுரைப்ப
எப்பரி சாயினு மெம்பொருட் டொருசுதன்
தப்பிலா மறையோன் றனக்கருள் செய்கென
எமையா ளுடைய யுமையாள் மொழிய
இமையா முக்க ணிறைவன் வெகுண்டு
பெண்சொற் கேட்டல் பேதமை யென்று
பண்சொற் பயிலும் பாவையை நோக்கிப்
பேதாய் நீபோய்ப் பிறவென மொழிய
மாதுவை யவளும் மனந்தளர் வுற்றுப்
பொன்றிடும் மானிடப் புன்பிறப் பெய்துதல்
நன்றல வென்றே நடுக்கமுற் றுரைப்பக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறைமிடற் றண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுத லவட்குநீ பிள்ளை யாகச்
சென்றவண் வளர்ந்து சிலபகற் கழித்தால்
மன்றல்செய் தருள்வோம் வருந்தலை யென்று
விடைகொடுத் தருள விலங்கல்மா மகளும்
பெடைமயிற் சாயற் பெண்மக வாகித்
தார்மலி மார்பன் சதுர்மறைக் கிழவன்
சீர்மலி மனைவி திருவயிற் றுதித்துப்
பாவையுஞ் சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற வியல்பின ளாகி
ஐயாண் டடைந்தபி னன்னையு மத்தனும்
மையார் கருங்குழல் வாணுதறன்னை
மானிட மறையோர்க்கு வதுவை செய்திடக்
கானமர் குழலியைக் கருதிக் கேட்பப்
பிறப்பிறப் பில்லாப் பெரியோற் கன்றி
அறத்தகு வதுவைக் கமையேன் யானென
மற்றவன் றன்னையுன் மணமக னாகப்
பெற்றிட லரிதெனப் பெயர்த்தவர் பேச
அருந்தவ முயற்சியா லணுகுவே ன்யானெனக்
கருந்தட நெடுங்கண் கவுரியங் குரைப்ப
மருமலி கமல மலர்த்தடத் தருகிற்
தருமலி நிழற்றவச் சாலைய தமைத்துப்
பணியணி பற்பல பாங்கியர் சூழ
அணிமலர்க் குழலுமை யருந்தவம் புரிதலும்
அரிவைத னருந்தவ மறிவோம் யாமென
இருவரு மறியா விமையவர் பெருமான்
மானிட மேந்தும் வண்ணம தொழிந்து
மானிட யோக மறையவ னாகிக்
குடையொடு தண்டுநற் குண்டிகை கொண்டு
மடமயி றவம்புரி வாவிக் கரையிற்
கண்ணுதல் வந்து கருணை காட்டித்
தண்ணறுங் கூந்தற் றையலை நோக்கி
மின்பெறு நுண்ணிடை மெல்லிய லாய்நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பெறத் தவமிங் கியற்றுவ தென்றலுங்
கொன்றைவார் சடையனைக் கூடவென் றுரைத்தலும்
நன்றெனச் சிரித்து நான்மறை யோனும்
மாட்டினி லேறி மான்மழு தரித்துக்
காட்டினிற் சுடலையிற் கணத்துட னாடிப்
பாம்பு மெலும்பும் பல்தலை மாலையுஞ்
சாம்பரு மணிந்து தலையோ டேந்திப்
பிச்சைகொண் டுழலும் பித்தன் றன்னை
நச்சிநீர் செய்தவம் நகைதரு முமக்கெனப்
பூங்கொடி யருந்தவம் பூசுரன் குலைத்தலும்
ஆங்கவ ணாணமுற் றணிமனை புகுதச்
சேடியர் வந்து செழுமலர்க் குழலியை
வாடுத லொழிகென மனமிகத் தேற்றிச்
சிந்துர வாணுதற் சேடியர் சிலர்போய்த்
தந்தைதா யிருவர் தாளிணை வணங்கி
வாவிக் கரையில் வந்தொரு மறையோன்
பாவைதன் செங்கையைப் பற்றின னென்றலுந்
தோடலர் கமலத் தொடைமறை முனியை
ஆடக மாடத் தணிமனை கொணர்கென
மாடக யாழ்முரல் மங்கைய ரோடி
நீடிய புகழாய் நீயெழுந் தருளென
மைமலர்க் குழலி வந்தெனை யழைக்கில்
அம்மனை புகுவனென் றந்தண னுரைத்தலும்
பொற்றொடி நீபோய்ப் பொய்கையி னின்ற
நற்றவ முனியை நடாத்திக் கொணர்கென
சிவனை யிகழ்ந்த சிற்றறி வுடையோன்
அவனையான் சென்றிங் கழைத்திடே னென்று
சிற்றிடை மடந்தையுஞ் சீறின ளாகி
மற்றைய மாதர் மதிமுக னோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக் கல்லவென்
பொற்பமர் கொங்கை பொருந்துநற் கரிதால்
மானிட வேட மறையவன் றனக்கு
யான்வெளிப் படுவ தில்லையென் றிசைப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனையிடை வந்த மாமுனி தன்னை
இணையடி தொழுத லிளையோர்க் கியல்பெனத்
தந்தையுந் தாயுந் தகைபெற மொழியச்
சிந்தை குளிர்ந்து சீறுத லொழிந்து
தாய்சொல் மறுத்தல் பாவமென் றஞ்சி
ஆயிழை தானு மவனெதிர் சென்று
சுற்றிவந் தவனடி சுந்தரி வணங்கி
மற்றவன் றன்னை மனையிற் கொணர்ந்து
ஆதியம் பகவற் கன்ப னாகும்
வேதியன் பழைய விருந்தனென் றெண்ணி
ஆசனம் நல்கி யருக்கிய முதலாப்
பாதபூ சனைகள் பண்ணிய பின்னர்ப்
போனகம் படைத்துப் பொரிக்கறி பருப்புநெய்
ஆன்பால் மாங்கனி யழகிய பலாச்சுளை
தேன்கத லிப்பழஞ் சீர்பெறப் படைத்து
அந்தணன் றன்னை அமுதுசெய் வித்துச்
சந்தனங் குங்குமச் சாந்திவை கொடுத்துத்
தக்கோ லத்தோடு சாதிக் காயும்
கர்ப்பூ ரத்தொடு கவின்பெறக் கொண்டு
வெள்ளிலை யடைக்காய் விளங்கிய பொன்னின்
ஒள்ளிய தட்டி லுவந்துமுன் வைத்துச்
சிவனெனப் பாவனை செய்து நினைந்து
தவமுறை முனிவனைத் தாளிணை வணங்கத்
தேனமர் குழலி திருமுகம் நோக்கி
மோனமா முனிபுன் முறுவல் காட்டிக்
கற்றைச் சடையுங் கரமொரு நான்கும்
நெற்றியி னயனமு நீல கண்டமும்
மானுமழுவு மலர்க்கரத் திலங்கக்
கூன்மதி நிலவுங் கொழித்திட முடிமேல்
வரந்தரு முதல்வன் மடமயில் காணக்
கரந்ததன் னுருவங் காட்டிமு னிற்ப
மரகத மேனி மலைமக டானும்
விரைவோடங் கவனடி வீழ்ந்திறைஞ் சினளே
அரிய யனிந்திர னமரர் விஞ்சையர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருடர் கின்னரர் காய வாசியர்
ஏதமில் முனிவ ரவுணரி ராக்கதர்
பூத ரியக்கர்கிம் புருட ரலகை
சித்தர்தா ரகைகந் தருவர்கள் முதலாய்க்
கணிக்கருங் பதினெண் கணத்தில்உ ள் ளவரும்
மணிக்கருங் களத்தனை வந்தடைந் ததன்பின்
மன்றலங் குழலிக்கு வதுவைநாட் குறித்துத்
தென்றல்வந் திலங்கு முன்றி லகத்துப்
பொன்திகழ் பவளப் பொற்கால் நாட்டி
மாணிக்க த்தால் வளைபல பரப்பி
ஆணிப்பொற் றகட்டா லழகுற வேய்ந்து
நித்தில மாலை நிரைநிரை தூக்கிப்
பத்திக டோறும் பலமணி பதித்துத்
தோரணம் நாட்டித் துகில்விதா னித்துப்
பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்துத்
திக்குத் தோறுந் திருவிளக் கேற்றிப்
பக்திப் படர்முளைப் பாலிகை பரப்பிக்
கன்னலுங் கமுகுங் கதலியு நாட்டிப்
பன்மலர் நாற்றிப் பந்தர்சோ டித்து
நலமிகு கைவலோர் நஞ்சணி மிடற்றனைக்
குலவிய திருமணக் கோலம் புனைந்தார்
வருசுரர் மகளிர் மலைமக டன்னை
திருமணக் கோலஞ் செய்தன ராங்கே
எம்பி ரானையு மிளங்கொடி தன்னையும்
உம்ப ரெல்லா மொருங்குடன் கூடிக்
கடலென விளங்குங் காவணந் தன்னிற்
சுடர்விடு பவளச் சுந்தரப் பலகையில்
மறைபுகழ்ந் தேத்த மகிழ்ந்துட னிருத்திப்
பறையொலி யோடு பனிவளை ஆர்ப்ப
வதுவைக் கேற்ப மறைவிதி நெறியே
சதுர்முக ஹோமச் சடங்குக ளியற்றத்
தறுகலற் றொளிபொற் றாலி பூட்டிச்
சிறுமதி நுதலியைச் சிவன்கைப் பிடித்தபின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிவலஞ் சூழ எரிவலம் வந்து
பரிவுடன் பரிமளப் பாயலில் வைகிப்
போதணி கருங்குழற் பூவைதன் னுடனே
ஓதநீர் வேலைசூழ் உஞ்சைஅம் பதிபுக
ஏரார் வழியி னெண்டிசை தன்னைப்
பாரா தேவா பனிமொழி நீயென
வருங்கருங் குழலாள் மற்றுமுண் டோஎனத்
திருந்திழை மடந்தை திரும்பினள் பார்க்கக்
களிறும் பிடியுங் கலந்துவிளை யாடல்கண்டு
ஒளிர்மணிப் பூணா ளுரவோ னுடனே
இவ்வகை யாய்விளை யாடுவோ மீங்கென
அவ்வகை யரனு மதற்குடன் பட்டு
மதகரி யுரித்தோன் மதகரி யாக
மதர்விழி யுமைபிடி வடிவம தாகிக்
கூடிய கலவியிற் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ
அந்தணர் சிறக்க வானினம் பெருகச்
செந்தழல் வேள்விவே தாகமஞ் சிறக்க
அறம்பல பெருக மறம்பல சுருங்கத்
திறம்பல அரசர் செகதலம் விளங்க
வெங்கரி முகமும் வியன்புழைக் கையொடு
ஐங்கர தலமு மலர்ப்பத மிரண்டும்
பவளத் தொளிசேர் பைந்துவர் வாயுந்
தவளக் கிம்புரித் தடமருப் பிரண்டுங்
கோடிசூ ரியர்போற் குலவிடு மேனியும்
பேழைபோ லகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியி னயனமு முப்புரி நூலுங்
கற்றைச் சடையுங் கனகநீள் முடியுந்
தங்கிய முறம்போற் றழைமடிச் செவியுமாய்
ஐங்கரத் தண்ணல் வந்தவ தரித்தலும்
பொங்கர வணிந்த புண்ணிய மூர்த்தியும்
மங்கை மனமிக மகிழ்ந்துட னோக்கி
விண்ணு ளோர்களும் விரிந்தநான் முகனும்
மண்ணு ளோர்களும் வந்துனை வணங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கவர் தங்கட் கருள்சுரந் தருளித்
தீங்கது தீர்த்துச் செந்நெறி யளித்துப்
பாரண மாகப் பலகனி யருந்தி
ஏரணி ஆலின்கீழ் இனிதிரு என்று
பூதலந் தன்னிற் புதல்வனை யிருத்திக்
காதல்கூர் மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து
தெய்வ நாயகன் சிறந்தினி திருந்தபின்
வானவ ராலும் மானுட ராலுங்
கானமர் கொடிய கடுவிலங் காலுங்
கருவிக ளாலுங் கால னாலும்
ஒருவகை யாலு முயிரழி யாமல்
திரம்பெற மாதவஞ் செய்துமுன் னாளில்
வரம்பெறு கின்ற வலிமையி னாலே
ஐமுகச் சீயமொத் தடற்படை சூழக்
கைமுகம் படைத்த கஜமுகத் தவுணன்
பொன்னுல கழித்துப் புலவரை வருத்தி
இந்நிலத் தவரை யிடுக்கண் படுத்திக்
கொடுந்தொழில் புரியுங் கொடுமைகண் டேங்கி
அடுந்தொழிற் குலிசத் தண்ணலு மமரருங்
கறைபடு கண்டக் கடவுளைப் போற்றி
முறையிடக் கேட்டு முப்புர மெரித்தோன்
அஞ்சலீ ரென்றவர்க் கபயங் கொடுத்தே
அஞ்சுகைக் கரிமுகத் தண்ணலை நோக்கி
ஆனை மாமுகத் தவுணனொ டவன்றன்
சேனைகள் முழுவதுஞ் சிந்திடப் பொருது
குன்றுபோல் வளர்த்த குறட்படை கூட்டி
வென்றுவா வென்று விடைகொடுத் தருள
ஆங்கவன் றன்னோ டமர்பல வுடற்றிப்
பாங்குறு மவன்படை பற்றறக் கொன்றபின்
தேர்மிசை யேறிச் சினங்கொடு செருவிற்
கார்முகம் வளைத்த கயமுகா சுரன்மேல்
ஒற்றைவெண் மருப்பை யொடித்தவ னுரத்திற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றிட வெறிந்தான் குருதிசோர்ந் திடவே
சோர்ந்தவன் வீழ்ந்து துண்ணென வெழுந்து
வாய்ந்தமூ டிகமாய் வந்தவன் பொரவே
வந்த மூடிகத்தை வாகன மாக்கி
எந்தை விநாயக னேறின னிப்பால்
எறிந்தவெண் மருப்பங் கிமைநொடி யளவிற்
செறிந்தது மற்றவன் றிருக்கரத் தினிலே
வெல்லவைக் கதிர்வேல் விழி படைத்தருளும்
வல்லவை தனைத்தன் மனையென மணந்தே
ஓகையோ டெழுந்தாங் குயர்புடை சூழ
வாகையும் புனைந்து வரும்வழி தன்னிற்
கருச்சங் கோட்டிற் கயல்கமு கேறுந்
திருச்செங் காட்டிற் சிவனையர்ச் சித்துக்
கணபதீச் சரமெனுங் காரண நாமம்
பணபதி புகழ்தரு பதிக்குண் டாக்கிச்
சங்கரன் பார்ப்பதி தனிமன மகிழ
இங்குவந் தன்புட னெய்திய பின்னர்க்
கணங்களுக் கரசாய்க் கதிர்முடி சூட்டி
இணங்கிய பெருமைபெற் றிருந்திட வாங்கே
தேவர்கள் முனிவர் சித்தர்கந் தருவர்
யாவரும் வந்திவ னேவல்செய் திடுநாள்
அதிகமா யுரைக்கு மாவணித் திங்களின்
மதிவளர் பக்கம் வந்திடு சதுர்த்தியில்
விநாயகற் குரிய விரதமென் றெண்ணி
மனாதிகள் கழித்து மரபொடு நோற்றார்
இப்படி நோற்றிட் டெண்ணிய பெருநாள்
ஒப்பரும் விரதத் துறமொரு சதுர்த்தியில்
நோற்றுநற் பூசை நுடங்கா தாற்றிப்
போற்றிசெய் திட்டார் புலவரைங் கரனை
மருமலர் தூவும் வானவர் முன்னே
நிருமலன் குமர னிருத்தம் புரிந்தான்
அனைவருங் கைதொழு தடியிணை போற்ற
வனைகழற் சந்திரன் மனச்செருக் கதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேழைபோல் வயிறும் பெருத்தகாத் திரமுந்
தாழ்துளைக் கையுந் தழைமுறச் செவியுங்
கண்டனன் நகைத்தான் கரிமுகக் கடவுளுங்
கொண்டனன் சீற்றங் குபேரனை நோக்கி
என்னைக் கண்டிங் கிகழ்ந்தனை சிரித்தாய்
உன்னைக் கண்டவ ருரைக்குமித் தினத்திற்
பழியொடு பாவமும் பலபல விதனமும்
அழிவுமெய் துவரென் றசனிபோற் சபித்தான்
விண்ணவ ரெல்லா மிகமனம் வெருவிக்
கண்ணருள் கூருங் கடவுளித் தினத்திற்
கோரவெஞ் சினமிகக் கொண்டன னந்நாள்
மார்கழித் திங்கள் மதிவளர் பக்கஞ்
சதயந் தொட்ட சட்டிநல் விரதமென்று
இதயத்து எண்ணி யாவரும் நோற்றார்
இப்புவி மாந்த ரியம்பிய விரதம்
வைப்புட னோற்ற வகையினிச் சொல்வாம்
குருமணி முடிபுனை குருகுலத் துதித்த
தருமனு மிளைய தம்பியர் நால்வருந்
தேவகி மைந்தன் றிருமுக நோக்கி
எண்ணிய விரத மிடையூ றின்றிப்
பண்ணிய பொழுதே பலிப்புண் டாகவுஞ்
செருவினி லெதிர்த்த செறுநரை வென்று
மருமலர்ப் புயத்தில் வாகை சூடவும்
எந்தத் தெய்வ மெவ்விர தத்தை
வந்தனை செய்யில் வருநமக் குரையெனப்
பாட்டளி துதையும் பசுந்துழாய் மார்பனுங்
கேட்டருள் வீரெனக் கிளத்துத லுற்றான்
அக்குநீ றணியு மரன்முத லளித்தோன்
விக்கினந் தீர்க்கும் விநாயக மூர்த்தி
ஓடவைத் திடும்பொன் னொத்தொளி விளக்குங்
கோடிசூ ரியர்போற் குலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பெருத்தோன்
தடவரை போலுஞ் சதுர்ப்புய முடையோன்
சர்வ ஆபரணமுந் தரிக்கப் பட்டவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுமதிக் குழவிபோ லொருமருப் புடையோன்
ஒருகையிற் றந்தமு மொருகையிற் பாசமும்
ஒருகையில் மோதக மொருகையிற் செபஞ்செய்
உத்தம மாலையோ னுறுநினை வின்படி
சித்திசெய் வதனாற் சித்திவி நாயகன்
என்றிமை யவரும் யாவருந் துதிப்ப
நன்றித ருந்திரு நாமம் படைத்தோன்
புரவலர் காணப் புறப்படும் போதுஞ்
செருவினில் யுத்தஞ் செய்திடும் போதும்
வித்தியா ரம்பம் விடும்பிடும் போதும்
உத்தியோ கங்க ளுஞற்றிடும் போதும்
ஆங்கவன் றன்னை யருச்சனை புரிந்தால்
தீங்குறா தெல்லாஞ் செயமுண் டாகும்
கரதல மைந்துடைக் கணபதிக் குரிய
விரதமொன் றுளததை விரும்பிநோற் றவர்க்குச்
சந்ததி தழைத்திடுஞ் சம்பத் துண்டாம்
புந்தியில் நினைந்த பொருள்கை கூடும்
மேலவர் தம்மையும் வென்றிட லாமெனத்
தேவகி மைந்தன் செப்பிடக் கேட்டு
நுவலரும் விரதம் நோற்றிடு மியல்பும்
புகர்முகக் கடவுளைப் பூசைசெய் விதமும்
விரித்தெமக் குரைத்திட வேண்டுமென் றிரப்ப
வரைக்குடை கவித்தோன் வகுத்துரை செய்வான்
தேருநீ ராவணித் திங்களின் மதிவளர்
பூர்வ பக்கம் புணர்ந்திடு சதுர்த்தியின்
முந்தும் புலரியின் முறைநீா படிந்து
சந்தி வந்தனந் தவறா தியற்றி
அத்தின மதனி லைங்கரக் கடவுளைப்
பக்தியோ டர்ச்சனை பண்ணுதல் வேண்டும்
வெள்ளியாற் பொன்னால் விளங்கும வன்றன்
ஒள்ளிய வருட்டிரு வுருவுண் டாக்கிப்
பூசனை புரியப் புகன்றனர் பெரியோர்
ஆசிலா மண்ணா லமைத்தலுந் தகுமால்
பூசைசெய் திடுமிடம் புனிதம தாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசமென் மலரின் மஞ்சரி தூக்கிக்
கோடிகங் கோசிகங் கொடிவிதா னித்து
நீடிய நூல்வளை நிறைகுடத் திருத்தி
விந்தைசேர் சித்தி விநாயக னுருவைச்
சிந்தையி னினைத்து தியானம் பண்ணிப்
ஆவா கனம் முதல் அர்க்கிய பாத்தியம்
வாகா ராச மனம்வரை கொடுத்து
ஐந்துஅமிர் தத்தால் அபிடே கித்துக்
கந்தஞ் சாத்திக் கணேசமந் திரத்தால்
ஈசுர புத்திரன் என்னும்மந் திரத்தால்
மாசுஅகல இரண்டு வத்திரஞ் சாத்திப்
பொருந்துஉமை சுதனாப் புகலுமந் திரத்தால்
திருந்தும் பளிதத் தீபங் கொடுத்துப்
பச்சறுகு உடன்இரு பத்தொரு விதமாய்
பத்திர புட்பம் பலபல கொணர்ந்தே
உமாசுதன் கணாதிபன் உயர்கரி முகத்தோன்
குமார குரவன் பாசஅங் குசகரன்
ஏக தந்தன் ஈசுரன் புத்திரன்
ஆகு வாகனன் அருள்தரு விநாயகன்
சர்வகா ரியமுந் தந்துஅருள் புரிவோன்
ஏரம்ப மூர்த்தி என்னும்நா மங்களால்
ஆரம் பத்துடன் அர்ச்சனை பண்ணி
மோதகம் அப்பம் முதற்பணி காரந்
தீதகல் மாங்கனி தீங்கத லிப்பழம்
வருக்கை கபித்த மாதுளங் கனியோடு
தரித்திடு நெட்டிலைப் தாழைமுப் புடைக்காய்
பருப்புநெய் பொரிக்கறி பால்தயிர் போனகம்
விருப்புள சுவைப்பொருள் மிகவும்முன் வைத்து
உருத்திரப் பிரியஎன்று உரைக்குமந் திரத்தால்
நிருத்தன் மகற்கு நிவேதனக் கொடுத்து
நற்றவர் புகன்றநா னான்குஉப சாரமும்
மற்றவன் திருவுளம் மகிழ்ந்திடச் செய்து
எண்ணுந் தகுதி இருபிறப் பாளருக்கு
உண்அறு சுவைசேர் ஓதனம் நல்கிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தனம் முத்துத் தானந் தக்கிணை
அந்தணர்க்கு ஈர்ந்திட்டு அருச்சகன் தனக்குத்
திருத்தகு விநாயகத் திருஉரு வத்தைக்
தரித்தவத் திரத்துடன் தானமாகக் கொடுத்து
நைமித் திகம்என நவில்தரு மரபால்
இம்முறை பூசனை யாவர்செய் தாலும்
எண்ணிய கருமம் யாவையும் முடிப்பர்
திண்ணிய செருவிற் செம்மிகப் பெறுவர்
அரன்இவன் தன்னைமுன் அர்ச்சனை பண்ணிப்
புரமொரு மூன்றும் பொடிபட எரித்தான்
உருத்திர னிவனை உபாசனை பண்ணி
விருத்திரா கரனை வென்றுகொன் றிட்டான்
அகலிகை யிவன்றா ளர்ச்சனை பண்ணிப்
பகர்தருங் கணவனைப் பரிவுட னடைந்தாள்
தண்ணார் மதிமுகத் தாள்தம யந்தி
அன்னா ளிவனை யர்ச்சனை பண்ணி
நண்ணார் பரவும் நளனை அடைந்தாள்
ஐங்கரக் கடவுளை அர்ச்சனை பண்ணி
வெங்கத நிருதரை வேரறக் களைந்து
தசரதன் மைந்தன் சீதையை யடைந்தான்
பகீரத னென்னும் பார்த்திவ னிவனை
மகிதலந் தன்னின் மலர்கொடர்ச் சித்துத்
வரநதி தன்னை வையகத்து அழைத்தான்
அட்டதே வதைகளும் அர்ச்சித்து இவனை
அட்ட போகத்துடன் அமிர்தமும் பெற்றார்
உருக்குமணி என்னும் ஒண்டொடி தன்னைச்
செருக்கொடு வவ்விச் சிசுபா லன்றாள்
கொண்டுபோம் அளவிற் குஞ்சர முகவனை
வண்டுபாண் மிழற்றா மலர்கொடுஅர்ச் சித்துக்
தாரியின் மறித்தவன் றனைப்புறங் கண்டு
யாமுமங் கவளை யின்புறப் பெற்றோம்
புகர்முகக் கடவுளைப் பூசனை புரிந்து
மிகமிக மனத்தில் விழைந்தன பெற்றார்
இப்புவி தன்னிலெண்ணுதற் கரிதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி நீவிரு மவனையர்ச் சித்தால்
எப்பொருள் விரும்பினீ ரப்பொருள் பெறுவீர்
என்றுகன் றெறிந்தோ னெடுத்திவை யுரைப்ப
அன்றுமுதற் றருமனு மனுசரு மிவனைப்
பூசனை புரிந்துகட் புலனிலான் மைந்தரை
நாசனம் பண்ணி நராதிப ராகிச்
சிந்தையி னினைந்தவை செகத்தினிற் செயங்கொண்டு
அந்தமில் செல்வத் தரசியல் பெற்றார்
ஈங்கிது நிற்க விவ்விர தத்தியல்
ஓங்கிய காதைமற் றொன்றுரை செய்வாம்
கஞ்சநான் முகன்தருங் காசிபன் புணர்ந்த
வஞ்சக மனத்தால் மாயைதன் வயிற்றிற்
சூரனென் றொருவனுந் துணைவருந் தோன்றி
ஆர்கலி சூழ்புவி யனைத்தையு மழித்தே
சீருடைச் சுவர்க்கத் திருவளங் கெடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருத்தியும்
நிரந்தரந் தீய நெறிநடத் துதலால்
ஆயிரங் கண்ணனு மமரரும் முனிவரும்
நீயிரங் கெமக்கென நெடுங்கரங் கூப்பி
இரசத கிரியுறை யிறைவனை வணங்கி
வரமிகுஞ் சூரன் வலிமைக ளுரைக்கச்
சுடர்விடு மணிமுடிச் சூரனை வெல்லக்
கதிர்விடு வடிவேல் கரதலத் தேந்தும்
புதல்வனைத் தருவோம் போமின் நீரென
அமரர் கோனுக் கரன்விடை கொடுத்துச்
சமர வேல்விழித் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடாது ஊடலும்
ஓடிய வானோ ரொருங்குடன் கூடிப்
பாவகன் றன்னைப் பரிவுட னழைத்துச்
சூரன் செய்யுந் துயர மெல்லாம்
ஊரர வணிந்தோற் குரையென வுரைப்பக்
காமனை யெரித்த கடவுளென் றஞ்சிப்
பாவகன் பயமுறப் பயமுனக்கேதென
உற்றிடுங் கரதலத் துன்னையே தரித்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்றியின் நயனமும் நீயே யாதலிற்
குற்ற மடாது கூறுநீ சென்றென
வானவர் மொழிய மற்றவன் றானுந்
தானுமச் சபையிற் றரியா தேகி
எமையா ளுடைய வுமையா ளுடனே
அமையா வின்பத் தமர்ந்தினி திருந்த
பள்ளி மண்டபம் பாவகன் குறுகலும்
ஒள்ளிய மடந்தை ஒதுங்கிநா ணுதலுந்
தெள்ளிதிற் பரமனுந் தேயுவைக் கண்டே
அறுமுகப் பிள்ளையை யவன்கையி லீதலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதி நீள்முடிச் சுடரோன் கொணர்ந்து
வாத ராசன் மலர்க்கையிற் கொடுப்ப
நீதி யோடு நின்றுகை யேந்திப்
போதநீள் வாயுவும் பொறுக்கவொண் ணாமற்
தரும்புனற் கங்கை தன்கையிற் கொடுப்பத்
தரும்புனற் கங்கையுந் தாங்கவொண் ணாமற்
பொருந்திரைச் சரவணப் பொய்கையில் வைப்பத்
தண்ணார் வதனத் தாமரை ஆறுங்
கண்ணா றிரண்டுங் கரமீராறும்
தூண்எனத் திரண்ட தோள் ஈராறும்
மாணயி லாதி வான்படை யுங்கொண்டு
அறுமுகக் கடவுளங் கவதரித் திடலும்
மறுகிய வும்பர் மகிழ்வுடன் கூடி
அறுமீன் களைப்பா லளித்திரென் றனுப்ப
ஆங்கவர் முலையுண் டறுமுகன் றானும்
ஓங்கிய வளர்ச்சி யுற்றிடு நாளில்
விமலனு முமையும் விடையுகைத் தாறு
தலைமக னிருந்த சரவணத் தடைந்து
முருகலர் குழலுமை முலைப்பா லூட்ட
இருவரு மின்பா லெடுத்துதெடுத் தணைத்துத்
தேவர்தம் படைக்குச் சேனா பதியெனக்
காவல்கொண் டளிக்கக் கதிர்முடி சூட்டி
அயில்வேல் முதற்பல ஆயுதங் கொடுத்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசையெலாஞ் செல்லுந் தேருமொன் றுதவிப்
பூதப் படைகள் புடைவரப் போய்நீ
ஓதுறு மவுணரை யொறுத்திடென் றனுப்ப
இருளைப் பருகு மிரவியைப் போலத்
தகுவரென் றவரைச் சமரிடை முருக்கிக்
குருகுப் பேர்பெறுங் குன்றமுஞ் சூரன்
மருமமுந் துளைபட வடிவேல் விடுத்தே
யாவரும் வியப்புற விந்திரன் மகளாந்
தேவகுஞ் சரியைத் திருமணம் புணர்ந்திட்டு
அமரர் கோனுக் கமருல களித்துக்
குமரவேளுங் குவலயம் விளங்க
அமரா வதியி லமர்ந்தினி திருந்தான்
சமர வேலுடைச் சண்முகன் வடிவுகண்டு
அமரர் மாத ரனைவரும் மயங்கி
எண்டருங் கற்பினை யிழந்தது கண்டே
அண்ட ரெல்லா மடைவுடன் கூடி
மாதொரு பாகனை வந்தடி வணங்கி
மருமலர்க் கடம்பனெம் மாநகர் புகாமல்
அருள்செய வேண்டும்நீ யம்பிகா பதியென
இமையவ ருரைப்ப இறையவன் தானுங்
குமரனைக் கோபங் கொண்டுமுன் முனியக்
காவல்கொண் டெம்வினை கட்டறுத் தருளுஞ்
சேவலங் கொடியோன் தேசம் போகத்
திருந்திழை யுமையா ளருந்துய ரெய்தி
வருந்திமுன் னிற்க மங்கையைப் பார்த்து
மங்கை நீதான் வருந்துத லொழிகுதி
அங்கையாற் சூதெறிந் தாடுவோம் வாவென
வென்றதுந் தோற்றதும் விளம்புவார் யாரெனக்
குன்றமென் முலையாள் கூறிய சமயம்
புற்றர வணிந்த புனிதனைக் காணவங்கு
உற்றனன் றிருமா லூழ்வினை வலியாற்
சக்கிர பாணியைச் சான்றெனக் குறித்து
மிக்கதோர் சூது விருப்புட னாடச்
சாயக நெருந் தடநெடுங் கருங்கண்
நாயகி வெல்ல நாயகன் தோற்ப
இன்பவா யிதழுமை யான்வென் றேனென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்பெரு மானும் யான்வென் றேனென
ஒருவர்க் கொருவ ருத்தரம் பேசி
இருவருஞ் சாட்சி யிவனைக் கேட்ப
மாமனை வதைத்த மால்முக நோக்கிக்
காமனை யெரித்தோன் கண்கடை காட்ட
வென்ற நாயகி தோற்றா ளென்றுந்
தோற்ற நாயகன் வென்றா னென்றும்
ஒன்றிய பொய்க்கரி யுடனங் குரைப்பக்
கன்றிய மனத்தொடு கவுரியங் குருத்து
நோக்கிநீ யிருந்தும் நுவன்றிலை யுண்மை
வாக்கினி லொன்றாய் மனத்தினி லொன்றாய்
மைக்கரி யுரித்தோன் வதனநோக்கிப்
பொய்க்கரி யுரைத்த புன்மையி னாலே
கனலென வயிற்றிற் கடும்பசி கனற்ற
நிலமிசைக் குருட்டு நெட்டுடற் பாம்பாய்க்
கடகரி முகத்துக் கடவுள்வீற் றிருக்கும்
வடதரு நீழலிற் கிடவெனச் சபித்தாள்
முளரிகள் பூத்த முகினிறத் துருப்போய்
துளவணி மருமனுந் துணைவிழி யிழந்தே
ஆண்டரைக் கணத்தி லாயிரம் யோசனை
நீண்டபைப் பாந்தள் நெட்டுட லெடுத்து
வளர்மருப் பொன்றுடை வள்ளல்வீற் றிருக்குங்
கிளர்சினை யாலின் கீழ்க்கிடந் தன்னால்
திரிகடக் கரியின் றிருமுகக் கடவுளும்
வழிபடு மடியார் வல்வினை தீர்த்தே
எழில்பெறு வடமரத் தின்கீ ழிருந்தான்
கம்பமா முகத்துக் கடவுள்தன் பெருமையை
அம்புவி யோருக் கறிவிப் போமென
உம்பரு லகத் தோரெழு கன்னியர்
தம்பநூ லேணியிற் றாரணி வந்து
கரிமுகக் கடவுளைக் கைதொழு தேத்திக்
கார்த்திகைக் கார்த்திகை கழிந்தபின் னாளில்
ஆர்த்த கலிங்கத் தணியிழை வாங்கி
இருபத் தோரிழை யின்புறக் கட்டி
ஒருபோ துண்டி யுண்டொரு மனமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதத் தாதியும் பூமியி லெழுத்தும்
ஆதிவி நாயகற் கானவெ ழுத்தும்
மூன்றெழுத் ததனால் மொழிந்தமத் திரமும்
தேன்றருங் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதரு பதினா றுபசா ரத்தால்
வரைமகள் மதலையை வழிபா டாற்றி
இருபது நாளு மிப்படி நோற்று
மற்றைநா ளைங்கர மாமுகன் பிறந்த
அற்றைநாட் சதயமும் மாறாம் பக்கமுஞ்
சேருமத் தினத்திற் றெளிபுன லாடி
வாரண முகத்தோன் வருபெருங் கோயில்
சீர்பெற மெழுகித் திருவிளக் கேற்றி
குலவுபொற் கலைகள் கொடுவிதா னித்து
மலர்பல தொடுத்திடு மாலைக ளாற்றிக்
கொலைபுரி வடிவேற் குகற்குமுன் வருகை
மலைமுகக் கடவுளை மஞ்சன மாட்டிப்
பொற்கலை நன்னூற் பூந்துகில் சாத்திச்
சொற்பெறு சந்தனச் சுகந்தம் பூசிச்
செருந்தி சண்பகஞ் செங்கழு நீரொடு
குருந்து மல்லிகை கோங்கொடு பிச்சி
கருமுகை புன்னை கடிகமழ் பாதிரி
மருவிரி ஞாழல் மகிழிரு வாட்சி
தாமரை முல்லை தழையவிழ் கொன்றை
பூமலர் நொச்சி பூத்தமைக் குவளை
காந்த ளாத்தி கடம்புசெவ் வந்தி
வாய்ந்தநல் லெருக்கு மலர்க்கர வீரம்
பச்சிலை நொச்சி படர்கொடி யறுகு
முத்தளக் கூவிளம் முதலிய சாத்தித்
தூபதீ பங்கள் சுகம்பெறக் கொடுத்தே
அப்பம் மோதக மவலெள் ளுருண்டை
முப்பழந் தேங்காய் முதிர்மொழிக் கரும்பு
சீனிதேன் சர்க்கரை செவ்விள நீருடன்
பால்நறு நெய்தயிர் பருப்புடன் போனகங்
கற்பகக் கடவுள் களித்திடத் திருமுன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொற்புறப் படைத்துப் பூசனை பண்ணி
நோற்பது கண்டு நோலா திருந்த
பாப்புரு வாகிய பஞ்சா யுதனும்
யாப்புறு கொங்கையீர் யானும்நோற் பேனென
ஆங்கவன் றனக்கும் வேண்டுவ தளித்துப்
பாங்கொடிவ் விரதம் பரிந்துநோற் பித்தார்
அண்டர்நா யகனா மைங்கர னருளால்
விண்டுவும் பண்டுள வேடம் பெற்றே
உஞ்ஞைமா நகர்புகுந் துமையோடு விமலன்
கஞ்சநாள் மலர்ப்பதங் கைதொழு திடலும்
பஞ்சிமென் சீறடிப் பார்ப்பதி நெஞ்சின்
வெஞ்சினம் மிகுந்து விமலனை நோக்கி
யானிடுஞ் சாப நீங்கிய தேனென
மானெடுங் கண்ணி மணிக்கத வடைப்ப
இறையவ னிதற்குக் காரண மேதென
மறிகடற் றுயிலு மாயவ னுரைப்பான்
பிறைமருப் பொன்றுடைப் பிள்ளையன் றெனக்குத்
தந்தருள் புரிந்த தவப்பய னீதெனச்
சிந்தை மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி யடைத்த பொன்தாழ் நீங்கி
சாங்குமுன் னுரைந்த சக்கிர பாணி
இக்கதை சொல்ல அக்கணி சடையனும்
மிக்கநல் விரதம் விருப்புடை நோற்றபின்
மாதுமை யடைத்த வன்றாழ் நீக்கி
நாதனை நணுகிட நம்பனும் நகைத்தான்
நானோ வந்து நகையா னதுவெனத்
தேன்நேர் மொழியாள் தெளியக் கூறென
நன்மதி நுதலாய் நானிலந் தன்னில்
உன்மக னோன்பி னுறுதி யறிந்து
சிந்தை மகிழ்ந்து சிரித்தேன் யானென
அத்தமி லரனை யாயிழை வணங்கிப்
பொருஞ்சூ ரறவேல் போக்கிய குமரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்படி யானும் வருத்திநோற் பேனென
இறையவன் கதைசொல ஏந்திழை நோற்பின்
குறமட மகளைக் குலமணம் புணர்ந்தோன்
சுடர்வடி வேலோன் தொல்வினை தீர்ந்து
தாதுமை வண்டுழுந் தாமத் தாமனை
மாதுமை யாளை வந்துகண் டனனே
கண்ணநீ கண்ணிலாக் கட்செவி யாகெனத்
தண்ணறுங் குழலுமை சாபமிட் டதுவும்
அக்குநீ றணியு மரன்முத லளித்த
விக்கின விநாயகன் விரதம்நோற் றதன்பின்
சுடர்கதை யேந்துந் துளவ மாலையன்
விடப்பணி யுருவம் விட்டுநீங் கியதும்
பரிவுகொள் கூத்துடைப் பரமனும் நோற்றுக்
கவுரியன் றடைத்த கபாடந் திறந்ததும்
வாசமென் குழலுடை மாதுமை நோற்பத்
தேசம் போக்கிய செவ்வேள் வந்ததும்
வானவர் நோற்று வரங்கள் பெற்றதும்
நாரத முனிவன் நவின்றிடக் கேட்டே
இந்நிலந் தன்னி லிவ்விர தத்தை
மன்னவன் வச்சிர மாலிமுன் நோற்றுக்
காயத் தெழுந்த கடும்பிணி தீர்ந்து
மாயிரும் புவியின் மன்னனாய் வாழ்ந்து
தடமுலைத் திலோத்தமை தனைமணம் புணர்ந்து
மழவிடை போற்பல மைந்தரைப் பெற்றுக்
கடைமுறை வெள்ளியங் கயிலையி லுற்றான்
பரிவொடிவ் விரதம் பாரகந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்கரமா தித்தன்
மறிகடற் புவிபெற வருந்தி நோற்றிடுநாள்
மற்றவன் காதன் மடவர லொருத்தி
இற்றிடு மிடையா ளிலக்கண சுந்தரி
மெத்தவன் புடனிவ் விரதநோற் பேனென
அத்தந் தன்னி லணியிழை செறித்துச்
சித்த மகிழ்ந்து சிலநாள் நோற்றபின்
உற்ற நோன்பி னுறுதி மறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிய இழையைக் காரிகை யவிழ்த்து
வற்றிய கொவ்வையின் மாடே போட
ஆங்கது தழைத்தே யலருந் தளிருமாய்ப்
பாங்குற வோங்கிப் படர்வது கண்டு
வேப்பஞ் சேரியிற் போய்ச்சிறை யிருந்த
பூப்பயில் குழலசேர் பொற்றொடி யொருத்தி
அவ்விய மில்லா ளவ்விடந் தன்னிற்
கொவ்வை யடகு கொய்வாள் குறுகி
இழையது கிடப்பக் கண்டவ ளெடுத்துக்
குழைதவழ் வரிவிழிக் கோதைகைக் கட்டி
அப்பமோ டடைக்கா யவைபல வைத்துச்
செப்ப முடனே திருந்திழை நோற்றிடக்
கரிமுகத் திண்ணல் கருணை கூர்ந்து
பண்டையி லிரட்டி பதம் அவட்கருளக்
கொண்டுபோ யரசனுங் கோயிலுள்ள வைத்தான்
விக்கிரமா தித்தன் விழிதுயில் கொள்ள
உக்கிர மான உடைமணி கட்டித்
தண்டையுஞ் சிலம்புந் தாளினின் றொலிப்பக்
கொண்டல் போல்வருங் குஞ்சர முகத்தோன்
மனமிகக் கலங்கும் மன்னவன் றன்னிடங்
கனவினில் வந்து காரண மாக
இலக்கண சுந்தரி யிம்மனை யிருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடு புறத்தெனத்
துண்ணென எழுந்து துணைவியை நோக்கிக்
கண்ணுறக் கண்ட கனவின் காரணம்
அண்ண லுரைத்திடு மவ்விழி தன்னில்
ஆனை குதிரை யவைபல மடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு
இமைப்பொழு திவளிங் கிருக்கலா காதென
அயற்கடை யவனு மகற்றிய பின்னர்
வணிகன் றனது மனைபுகுந் திருப்ப
மணியு முத்தும் வலியகல் லாய்விட
அணியிழை தன்னை யவனு மகற்ற
உழவர்தம் மனையி லுற்றவ ளிருப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்பயி ரழிந்து வளம்பல குன்ற
அயன்மனை யவரு மகற்றிய பின்னர்
குயவன் மனையிற் கோற்றொடி செல்லக்
குயக்கல முடைந்து கொள்ளை போக
அயற்கடை யவனு மகற்றிய பின்னர்க்
தூசுதூய் தாக்குந் தொழிலோர் மனைபுகத்
தூசுக ளெல்லாம் துணிந்துவே றாகத்
தூசரு மவளைத் தூரஞ் செய்ய
மாலைக் காரன் வளமனை புகலும்
மாலை பாம்பாய் வகையது கண்டு
ஞால மெல்லா நடுங்கவந் துதித்தாய்
சாலவும் பாவிநீ தான்யா ரென்ன
வெம்மனம் மிகவும் மேவி முனிவுறா
அம்மனை மகற்றிய பின்னர்
அவ்வை தன்மனை அவள்புகுந் திரும்ப
அவ்வை செல்லலும் அகங்க டோறும்
வைதன ரெறிந்தனர் மறியத் தள்ளினர்
கைகொடு குற்றினர் கண்டோர் பழித்தனர்
அவ்வை மீண்டுதன் அகமதிற் சென்று
இவ்வகைக் கன்னிநீ யாரென வினவக்
காத்தாண் டுஉலகு கருணையோ டாண்ட
மார்த்தாண்ட ராசன் மாமக ளொருத்தி
எல்லாக்கு மூத்தா ளிலக்கண சுந்தரி
சொல்லுவிக் கிரம சூரியன் மனையெனச்
சீர்கெட விருத்த தெரிவையை நோக்கி
நீரது கொண்டு நிலம்மெழு கிடுகெனச்
சாணி யெடுக்கத் தையலுஞ் சென்றாள்
சாணியு முழுத்துத் தண்ணீர் வற்றிப்
பேணிய புழுவாய்ப் பெரிது தோன்ற
மான்நேர் விழியாள் வருந்துதல் கண்டு
தானே சென்று சாணியெடுத்துத்
தண்ணீர் கொணர்ந்து தரைமெழுகிக் கிட்டு
மண்ணிய வீட்டில் மணிவிளக் கேற்றிப்
புத்தக மெடுத்து வாவெனப் புகலப்
புத்தகம் பாம்பாய்ப் பொருந்திநின் றாட
மெத்தவுள் நடுங்கி வீழ்ந்தவள் கிடப்பக்
கொவ்வையங் கனிவாய்த் கோதயை விலக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வை தானே யகமதிற் சென்று
புத்தக மெடுத்துப் பொருந்தப் பார்த்து
வித்தக நம்பி விநாயக மூர்த்தி
கற்பகப் பிள்ளைசெய் காரிய மிதுவென
உத்தமி யவ்வை யுணர்ந்துமுன் னறிந்து
தவநெறி பிழைத்த தையலை நோக்கி
நுவலரும் விநாயக நோன்புநோற் றிடுகெனக்
கரத்துமூ வேழிழைக் காப்புக் கட்டி
அப்பமு மவலு மாம்பழப் பண்டமுஞ்
செப்பம தாகத் திருமுன் வைத்தே
அவ்வை கதைசொல ஆயிழை கேட்டு
மத்தகக் களிற்றின் மகாவிர தத்தை
வித்தக மாக விளங்கிழை நோற்றுக்
கற்பக நம்பி கருணைபெற் றதற்பின்
சக்கர வாள சைனியத் தோடு
விக்கிரமா தித்தன் வேட்டையிற் சென்று
தானுஞ் சேனையுந் தண்ணீர் விரும்பி
எவ்வகை செய்வோ மெனவுளம் மெலிந்தே
அவ்வை தன்மனை யங்கவ ரணுக
எய்துந் தாகமு மிளைப்புங் கண்டு
செவ்வே யவற்றைத் தீர்க்க வெண்ணி
இலக்கண சுந்தரி யென்பவ டன்னை
அப்பமு நீரு மரசற் கருளெனச்
செப்பிய வன்னை திருமொழிப் படியே
உண்ணீர்க் கரகமு மொருபணி காரமும்
பண்நேர் மொழியாள் பார்த்திபற் குதவ
ஒப்பறு படையு முயர்படை வேந்தனும்
அப்பசி தீர அருந்திய பின்னர்
ஆனை குதிரை யவைகளு முண்டுந்
தானது தொலையாய்த் தன்மையைக் கண்டே
இவ்வகை சமைத்தநீ யாரென வினவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மவ்வலங் குழலாள் மௌனமாய் நிற்ப
அவ்வை தான்சென் றரசர்க் குரைப்பாள்
கணபதி நோன்பின் காரணங் காணிது
குணமுடை யிவளுன் குலமனை யாட்டி
இலக்கண சுந்தரி என்று அவ்வைகூற
மங்கையை நோக்கி மனமிக மகிழ்ந்து
திங்கள்நேர் வெள்ளிச் சிவிகையி லேற்றிக்
கொண்டுஊர் புகுந்தான் கொற்ற வேந்தனும்
ஒண்தொடி யாரி லுயர்பத முதவினன்
சிந்துர நுதலார் சென்றடி பணியச்
சுந்தரி யிருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே.

## நூற்பயன்

பொன்மிகும் கல்விமிகும் புத்திரரோடு எப்பொருளும்
மன்னும் நவமணியும் வந்து அணுகும் - உன்னி
ஒருக்கொம்பின் யானைமுக உத்தமனார் நோன்பின்
திருக்கதையைக் கேட்கச் சிறந்து.

பொற்பணைக்கை முக்கண் புகர்முகத்துப் பொன்மலிவுக்
கற்பகத்தின் நோன்பின் கதைதன்னைச் - சொற்பெருகக்
கற்றவரும் நோற்றவரும் காதலித்துக் கேட்டவரும்
பெற்றிடுவர் கற்பகத்தின் பேறு.

வெள்ளை எருதேறும் விரிசடையோன் பெற்றெடுத்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை - உள்ளபடி
நோற்றார் மிகவாழ்வார் நோலாது அருகிருந்து
கேட்டோர்க்கும் வாராது கேடு.

சூலிலார் நோற்கிற் சுதரை மிகப்பெறுவார்
சாலமிகும் வெங்கலியார் தாம்நோற்கில் - மேலைப்
பிறப்பு எல்லாம் நல்ல பெருஞ்செல்வம் எய்திச்
சிறப்பிலே வாழ்வார் சிறந்து.

**பிள்ளையார் கதை முற்றிற்று.**

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அபிராமி அந்தாதி

## கணபதி காப்பு

தாரமர் கொன்றையும் சண்பக மாலையும் சாத்தும்தில்லை
ஊரர்தம் பாகத்(து) உமைமைந்த னேஉல(கு) ஏழும்பெற்ற
சீரபி ராமிஅந் தாதிஎப் போதும்என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே.

## நூல்

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே. (1)

துணையும் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமும்கையில்
அணையும் திரிபுர சுந்தரி ஆவ(து) அறிந்தனமே. (2)

அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்துகொண்டு
செறிந்தேன் உனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறிந்தேன் நின்அன்பர் பெருமைஎண் ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும்நர குக்குற வாய மனிதரையே. (3)

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரும் நீயும்என் புந்திஎந் நாளும் பொருந்துகவே. (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்(சு) அமுதாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம்என் சென்னியதே. (5)

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரும் நீயும்என் புந்திஎந் நாளும் பொருந்துகவே. (4)

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்(சு) அமுதாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம்என் சென்னியதே. (5)

சென்னிய(து) உன்பொன் திருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னிய(து) உன்திரு மந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின்அடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னிய(து) என்றும்உன் றன்பர மாகம பத்ததியே. (6)

ததியுறு மத்திற் சுழலும்என் ஆவி தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண் டாய்கம லாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும் மாலும் வணங்கி என்றும்
துதியுறு சேவடி யாய்சிந்து ரானன சுந்தரியே. (7)

சுந்தரி எந்தை துணைவிஎன் பாசத் தொடரைஎல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி னாள்மகி டன்தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத் தாள்மலர் தாள்என் கருத்தனவே. (8)

கருத்தன எந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பால்அழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையும் அம்பும்
முருத்தன மூரலும் நீயும்அம் மேவந்தென் முன்நிற்கவே. (9)

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்ப(து) உன்னை
என்றும் வணங்குவ(து) உன்மலர்த் தாள்எழு தாமறையின்
ஒன்றும் அரும்பொருளே அருளே உமை யேஇமயத்(து)
அன்றும் பிறந்தவ ளேஅழி யாமுத்தி ஆனந்தமே. (10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்த மாய்என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்த மான வடி(வு)உடை யாள்மறை நான்கினுக்கும்
தானந்த மான சரணார விந்தம் தவளநிறக்
கானந்தம் ஆரடங் காம்எம்பி ரான்முடிக் கண்ணியதே. (11)

கண்ணிய(து) உன்புகழ் கற்ப(து) என்நாமம் கசிந்துபத்தி
பண்ணிய(து) உன்இரு பாதாம் புயத்தில் பகல் இரவா
நண்ணிய(து) உன்னை நயந்தோர் அவையத்து நான்முன் செய்த
புண்ணியம் ஏ(து)என்அம் மேபுவி ஏழையும் ப'த்தவளே. (12)

ப'த்தவ ளேபுவ னம்பதி னான்கையும் ப'த்தவண்ணம்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேஎன்றும் மூவா முகுந்தற்(கு) இளையவளே
மாத்தவ ளேஉன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே. (13)

வந்திப் பவர்உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப் பவர் நல்திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவர்அழி யாப்பர மானந்தர் பாரில் உன்னைச்
சந்திப் பவர்க்(கு) எளிதாம்எம் பிராட்டிநின் தண்ணளியே. (14)

தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள்செய்வார்
மண்ணளிக் கும்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் கும்செல்வ மும்அழி யாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக் கும்சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே. (15)

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே ஒளிரும் ஒளிக்கிட மேஎண்ணில் ஒன்றுமில்லா
வெளியே வெளிமுதல் ப'தங்களாகி விரிந்தஅம்மே
அளியேன் அறிவள விற்(கு) அளவான(து) அதிசயமே. (16)

அதிசய மான வடி(வு)உடை யாள்அர விந்தமெல்லாம்
துதிசய ஆனன சுந்தர வல்லி துணைஇரதி
பதிசய மான(து) அபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகவன் றோவாம பாகத்தை வவ்வியதே. (17)

வவ்விய பாகத்(து) இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து
வெவ்வியும் காலன்என் மேல்வரும் போது வெளிநிற்கவே. (18)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநின்ற நின்திரு மேனியைப் பார்த்தென் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்ட தில்லைக் கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே. (19)

உறைகின்ற நின்திருக் கோயில்நின் கேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறை யின்அடி யோமுடி யோஅமுதம்
நிறைகின்ற வெண்திங்க ளோகஞ்ச மோஎன்றன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோபூ்ர ணாசல மங்கலையே. (20)

மங்கலை செங்கல சம்முலை யாள்மலை யாள்வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயில் தாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாள்உடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே. (21)

கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமள மேபனி மால்இமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்றஅம்மே
அடியேன் இறந்(து)இங்(கு) இனிப்பிற வாமல்வந்(து) ஆண்டுகொள்ளே. (22)

கொள்ளேன் மனத்தில்நின் கோலம்அல் லா(து)அன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக்(கு)
உள்ளே அனைத்தினுக் கும்புறம் பேஉள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்கும் களியே அளியஎன் கண்மணியே. (23)

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழ கேஅணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே. (24)

பின்னே திரிந்(து)உன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண் டேன்முதல் மூவருக்கும்
அன்னே உலகுக்(கு) அபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனிஉன்னையான் மறவாமல் நின்(று) ஏத்துவனே. (25)

ஏத்தும் அடியவர் ஈரே ழுலகினை யும்படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவ ராம்கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல்அணங் கேமணம் நாறும்நின் தாள்இணைக்(கு)என்
நாத்தங்கு புன்மொழி ஏறிய வாறு நகையுடைத்தே. (26)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைத்தனை வஞ்சப் பிறவியை உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணிஎனக்கே
அடைத்தனை நெஞ்சத்(து) அழுக்கைஎல் லாம்நின் அருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்னருள் ஏதென்று சொல்லுவதே. (27)

சொல்லும் பொருளும் எனநட மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க் கேஅழி யாஅரசும்
செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே. (28)

சித்தியும் சித்தி தருந்தெய்வ மாகித் திகழும்பரா
சக்தியும் சக்தி தழைக்கும் சிவமும் தவமுயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும் வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே. (29)

அன்றே தடுத்(து)என்(னை) ஆண்டுகொண்டாய் கொண்ட(து) அல்லவென்கை
நன்றேஉனக்(கு) இனிநான்என் செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற் றுகைநின் திருவுளமே
ஒன்றே பலவுரு வேஅரு வேஎன் உமையவளே. (30)

உமையும் உமையொரு பாகனும் ஏக உருவில்வந்திங்(கு)
எமையும் தமக்கன்பு செய்யவைத் தார்இனி எண்ணுதற்குச்
சமையங் களுமில்லை ஈன்றெடுப் பாள்ஒரு தாயும்இல்லை
அமையும் அமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே. (31)

ஆசைக் கடலில் அகப்பட்(டு) அருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லல் படஇருந் தேனைநின் பாதம் எனும்
வாசக் கமலம் தலைமேல் வலியவைத்(து) ஆண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லு வேன்ஈசர் பாகத்து நேரிழையே. (32)

இழைக்கும் வினைவழி யேஅடும் காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந்(து) அஞ்சல்என் பாய்அத்தர் சித்தம்எல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே
உழைக்கும் பொழு(து)உ(ன்)னையே அன்னை யேஎன்பன் ஓடிவந்தே. (33)

வந்தே சரணம் புகும்அடி யாருக்கு வான்உலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் பாகமும்பொன்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே. (34)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்கட் பகவின் மணம்நாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட்(கு) ஒருதவம் எய்திய வாஎண் ணிறந்தவிண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவமெய்து மோதரங் கக்கடலுள்
வெங்கட் பணியணை மேல்துயில் கூடும் விழுப்பொருளே. (35)

பொருளே பொருள்முடிக் கும்போக மேஅரும் போகம் செய்யும்
மருளே மருளில் வரும்தெரு ளேஎன் மனத்துவஞ்சத்(து)
இருளேதும் இன்றி ஒளிவெளி யாகிஇருக்கும் உன்றன்
அருளே(து) அறிகின்றிலேன் அம்புயாதனத்(து) அம்பிகையே. (36)

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை; விடஅரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டும்; எட்டுத்
திக்கே அணியும் திருவுடை யான்இடம் சேர்பவளே. (37)

பவளக் கொடியில் பழுத்த செவ்வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகை யும்துணை யாஎங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணைமுலையாள்
அவளைப் பணிமின் கண்டீர் அமராவதி ஆளுகைக்கே. (38)

ஆளுகைக்(கு) உன்றன் அடித்தா மரைகள்உண்(டு); அந்தகன்பால்
மீளுகைக்(கு) உன்றன் விழியின் கடைஉண்டு; மேல்இவற்றின்
மூளுகைக்(கு) என்குறை; நின்குறை யேஅன்று; முப்புரங்கள்
மாளுகைக்(கு) அம்பு தொடுத்தவில் லான்பங்கில் வாள்நுதலே. (39)

வாணுதல் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற்(கு) எண்ணிய எம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சில்
காணுதற்(கு) அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும் அன்பு
பூணுதற்(கு) எண்ணிய எண்ணம்அன் றோமுன்செய் புண்ணியமே. (40)

புண்ணியம் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியும் செய்ய கணவரும் கூடிநம் காரணத்தால்
நண்ணிஇங் கேவந்து தம்அடி யார்கள் நடுவிருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேல்பத்ம பாதம் பதித்திடவே. (41)

இடங்கொண்டு விம்மி இணைகொண்(டு) இறுகி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண்(டு) இறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப் பரிபுரையே. (42)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபுரச் சீறடி பாசாங் குசைபஞ்ச பாணிஇன்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமைநெஞ்சில்
பரிபுர வஞ்சரை அஞ்சக் குனிப்பொருள் புச்சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர்செம் பாகத்(து) இருந்தவளே. (43)

தவளே இவள்எங்கள் சங்கர னார்மனை மங்கலமாம்
அவளே அவர்தமக்(கு) அன்னையும் ஆயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியும்ஆம்
துவளேன் இனியொரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டுசெய்தே. (44)

தொண்டுசெய் யாதுநின் பாதம் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தார்உள ரோஇல ரோஅப் பரிசடியேன்
கண்டுசெய் தால்அது கைதவ மோஅன்றிச் செய்தவமோ
மிண்டுசெய் தாலும் பொறுக்கைநன் றேபின் வெறுக்கையன்றே. (45)

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம்அடி யாரைமிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன் றேபுது நஞ்சை உண்டு
கறுக்கும் திருமிடற்றான் இடப் பாகம் கலந்த பொன்னே
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யான்உன்னை வாழ்த்துவனே. (46)

வாழும் படியொன்று கண்டுகொண் டேன்மனத் தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
எழும் பருவரை எட்டும்எட் டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே. (47)

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில்ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்துநெஞ்சில்
இடரும் தவிர்த்திமைப் போதிருப் பார்பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே. (48)

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும்அப் போது வளைக்கை அமைத்(து)
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்(து) அஞ்சல் என்பாய்
நரம்பை அடுத்த இசைவடி வாய்நின்ற நாயகியே. (49)

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாரகி சூலினி மாதங்கிஎன்(று)
ஆயகி யாதி உடையாள் சரணம் அரண்நமக்கே. (50)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரணம் பொருள்என்று அருள்ஒன் றிலாத அசுரர்தங்கள்
முரண்அன்(று) அழிய முனிந்தபெம் மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் என நின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும்எய் தார்இந்த வையகத்தே. (51)

வையம் துரகம் மதகரி மாமகு டம்சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயம் திருமனை யாள்அடித் தாமரைக்(கு) அன்புமுன்பு
செய்யும் தவம்உடை யார்க்குள வாகிய சின்னங்களே. (52)

சின்னஞ்சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையும்முத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலும்கண் மூன்றும் கருத்தில் வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலும் தவமில்லையே. (53)

இல்லாமை சொல்லி ஒருவர்தம் பால்சென்(று) இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவி ரேல்நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பால்ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே. (54)

மின்னா யிரம்ஒரு மெய்வடி வாகி விளங்குகின்ற
அன்னாள் அகமகிழ் ஆனந்த வல்லி அருமறைக்கு
முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
உன்னா(து) ஒழியினும் உன்னினும் வேண்டுவ(து) ஒன்றிலையே. (55)

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்(து)இவ் வுலகெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கிநிற் பாள்என்றன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற வாஇப்பொருள் அறிவார்
அன்றா லிலையில் துயின்றபெம் மானும்என் ஐயனுமே. (56)

ஐயன் அளந்த படியிரு நாழிகொண்(டு) அண்டம்எல்லாம்
உய்ய அறம்செயும் உன்னையும் போற்றி ஒருவர்தம்பால்
செய்த பசுந்தமிழ்ப் பாமாலை யும்கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்பவைத் தாய்இது வோஉன்றன் மெய்யருளே. (57)

அருணாம் புயத்தும்என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல்நல் லாள்தகை சேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமும் கராம்புயமும்
சரணாம் புயமும்அல் லாற்கண்டி லேன்ஒரு தஞ்சமுமே. (58)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சம் பிறிதில்லை ஈதல்ல தென்றுன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றி லேன்ஒற்றை நீள்சிலையும்
அஞ்சம்பும் இக்(கு)அலர் ஆகநின் றாய்அறி யார்எனினும்
பஞ்சஞ்சும் மெல்லடி யார்அடி யார்பெற்ற பாலரையே. (59)

பாலினும் சொல்இனி யாய்பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினும் தேவர் வணங்கநின் றோன்கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும்மெய்ப் பீடம்ஒரு
நாலினும் சாலநன் றோஅடி யேன்முடை நாய்த்தலையே. (60)

நாயே னையும்இங்(கு) ஒருபொரு ளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண்டாய் நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந் தாய்என்ன பேறுபெற்றேன்
தாயே மலைமக ளேசெங்கண் மால்திருத் தங்கச்சியே. (61)

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்துமத
வெங்கண் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடைக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனச்
செங்கைக் கரும்பும் மலரும் எப்போதும்என் சிந்தையதே. (62)

தேறும் படிசில ஏதுவும் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள்குன்றில் கொட்டும் தறிகுறிக் கும்சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்ப(து) அறிந்திருந்தும்
வேறும் சமயம்உண் டென்று கொண்டாடிய வீணருக்கே. (63)

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்க அன்பு
பூணேன் உனக்(கு)அன்பு பூண்டுகொண் டேன்நின் புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒருபொழு தும்திரு மேனிப்ர காசமன்றிக்
காணேன் இருநில மும்திசை நான்கும் ககனமுமே. (64)

ககனமும் வானமும் புவனமும் காணவிற் காமன்அங்கம்
தகனம்முன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையும்செம்
முகனும்முந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனும்முண் டாயதன் றோவல்லி நீசெய்த வல்லபமே. (65)

வல்லபம் ஒன்றறி யேன்சிறி யேன்நின் மலரடிசெம்
பல்லவம் அல்லது பற்றொன்றி லேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்தொடுத்த
சொல்அவ மாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே. (66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோத்திரம் செய்து தொழுதுமின் போலும்நின் தோற்றம் ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில்வை யாதவர் வண்மைகுலம்
கோத்திரம் கல்வி குணம்குன்றி நாளும் குடில்கள்தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே. (67)

பாரும் புனலும் கனலும் வெங்காலும் படர்விசும்பும்
ஊரும் முருகு சுவைஒளி ஊறொலி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீரடிக்கே
சாரும் தவமுடை யார்படை யாத தனமில்லையே. (68)

தனந்தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் ப'ங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே. (69)

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியில்
பண்களிக் கும்குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமும் ஆகி மதங்கர்குலப்
பெண்களில் தோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே. (70)

அழகுக்(கு) ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்றநெஞ் சேஇரங் கேல்உனக்(கு) என்குறையே. (71)

என்குறை தீரநின்(று) ஏத்துகின் றேன்இனி யான்பிறக்கின்
நின்குறை யேஅன்றி யார்குறை காண்இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரஎங் கோன்சடை மேல்வைத்த தாமரையே. (72)

தாமம் கடம்பு படைபஞ்ச பாணம் தனுக்கரும்பு
யாமம் வயிரவர் ஏத்தும் பொழு(து)எமக் கென்றுவைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்(கு)ஒளி செம்மையம்மை
நாமம் திரிபுரை ஒன்றோ டிரண்டு நயனங்களே. (73)

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்
பயன்என்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே. (74)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்குவர் கற்பகத் தருவின் நீழலில் தாயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்தஉந்திக்
கொங்கிவர் பூங்குழ லாள்திரு மேனி குறித்தவரே. (75)

குறித்தேன் மனத்தில்நின் கோலம்எல் லாம்நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப் பிரா(ன்)ஒரு கூற்றை மெய்யில்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே. (76)

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிரும்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகிஎன்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே. (77)

செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம வல்லி அணிதரளக்
கொப்பும் வயிரவக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத் தே(ன்)என் துணைவிழிக்கே. (78)

விழிக்கே அருளுண்(டு) அபிராம வல்லிக்கு வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்(டு) எமக்(கு)அவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங் களேசெய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே. (79)

கூட்டிய வாஎன்னைத் தன்னடி யாரில் கொடியவினை
ஓட்டிய வாஎன்கண் ஓடிய வாதன்னை உள்ளவண்ணம்
காட்டிய வாகண்ட கண்ணும் மனமும் களிக்கின்றதா
ஆட்டிய வாநடம் ஆடகத் தாமரை ஆரணங்கே. (80)

அணங்கே அணங்குகள் நின்பரி வாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகி லேன்நெஞ்சில் வஞ்சகரோ(டு)
இணங்கேன் என(து)உன(து) என்றிருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவொன் றிலேஎன்கண் நீவைத்த பேரளியே. (81)

அளியார் கமலத்தின் ஆரணங் கேஅகி லாண்டமும்நின்
ஒளியாய் நின்ற ஒளிர்தரு மேனியை உள்ளுந்தொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின்எங்ங னேமறப் பேன்நின் விரகினையே. (82)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரவும் புதுமலர் இட்டுநின் பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல் லார்இமை யோர்எவரும்
பரவும் பதமும் அயிரா வதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவரே. (83)

உடையாளை ஒல்கு செம்பட்(டு) உடையாளை ஒளிர்மதிசெஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்குநுண்ணூல்
இடையாளை எங்கள்பெம் மானிடை யாளைஇங்(கு) என்னைஇனிப்
படையாளை உங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே. (84)

பார்க்கும் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறை வண்(டு)
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும்என் அல்லல்எல்லாம்
தீர்க்கும் திரிபுரை யாள்திரு மேனியும் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்முலை மேல்முத்து மாலையுமே. (85)

மாலயன் தேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையும் சூடகக் கையையும் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங் காலன்என் மேல்விடும் போது வெளிநில்கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே. (86)

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திரு மூர்த்திஎன்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்விழி யால்மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு பாகம்கொண் டாளும் பராபரையே. (87)

பரமென்று உனையடைந் தேன்தமி யேனும்உன் பத்தருக்குள்
தரமன்று இவன்என்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரம்அன்று எரியப் பொருப்புவில் வாங்கிய போதில் அயன்
சிரம்ஒன்று செற்றகை யான்இடப் பாகம் சிறந்தவளே. (88)

சிறக்கும் கமலத் திருவேநின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும்நின் துணைவரும் நீயும் துரியம்அற்ற
உறக்கம் தரவந்(து) உடம்போ(டு) உயிர்உற வற்றறிவு
மறக்கும் பொழுதென்முன் னேவரல் வேண்டும் வருந்தியுமே. (89)

வருந்தா வகைஎன் மனத்தா மரையினில் வந்துபுகுந்(து)
இருந்தாள் பழைய இருப்பிட மாக இனிஎனக்குப்
பொருந்தா தொருபொருள் இல்லைவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கும் மெல்லியலே. (90)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்லிய நுண்ணிடை மின்அனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்அனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழும் அடி யாரைத் தொழுமவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பக(டு) ஊரும் பதம்தருமே. (91)

பதத்தே உருகிநின் பாதத்தி லேமனம் பற்றி உன்றன்
இதத்தே ஒழுக அடிமைகொண் டாய்இனி யான்ஒருவர்
மதத்தே மதிமயங் கேன்அவர் போன வழியும்செல்லேன்
முதல்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே. (92)

நகையே இ;திந்த ஞாலமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவில்அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பதுநாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே. (93)

விரும்பித் தொழும்அடி யார்விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்த மாகி அறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னஎல்லாம்
தரும்பித்தர் ஆவரென் றால்அபி ராமி சமயம்நன்றே. (94)

நன்றே வருகினும் தீதே விளைகினும் நான்அறிவ(து)
ஒன்றேயு மில்லை உனக்கே பரம்எனக்(கு) உள்ளஎல்லாம்
அன்றே உனதென்(று) அளித்துவிட் டேன்அழி யாதகுணக்
குன்றே அருட்கட லேஇம வான்பெற்ற கோமளமே. (95)

கோமள வல்லியை அல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை ஏதம் இலாளை எழுதரிய
சாமள மேனிச் சகல கலாமயில் தன்னைத்தம்மால்
ஆமள வும்தொழு வார்எழு பாருக்கும் ஆதிபரே. (96)

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே. (97)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குத்
கைவந்த தீயும் தலைவந்த ஆறும் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சின்அல் லால்ஒரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகல்அறி யாமடப் பூங்குயிலே. (98)

குயிலாய் இருக்கும் கடம்பா டவியிடைக் கோலஇயல்
மயிலாய் இருக்கும் இமயா சலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீதன்னமாம்
கயிலா யருக்(கு)அன்(று) இமவான் அளித்த கனங்குழையே. (99)

குழையத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளும் கரும்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையும்
உழையைப் பொருகண்ணும் நெஞ்சில்எப் போதும் உதிக்கின்றனவே. (100)

**நூற்பயன்**

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம்எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவிஅடங்கக்
காத்தாளை அங்கு பாசாங் குசமும் கரும்பும்அங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்(கு)ஒரு தீங்கில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சகலகலாவல்லி மாலை



வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ
சக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான் பித்தாக
வுண்டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வடநூற் கடலுந்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந்தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலு மன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங்கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதம் தெளிக்கும்வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமுமவ தானமுங்
கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்வாய்
நளினா சனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராம்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்யார்
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற்பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
முருகன் துணை



# கந்தர் சஷ்டி கவசம்

## காப்பு
## நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம்
துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம்
பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும்
நிமல ரருள்கந்தர்
சஷ்டி கவசந் தனை

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரன்று புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறந்த
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைகுற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன்நீகுரு பொறுப்பதுன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்கு அருளுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

**முற்றும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org